University of Madras.

B. A. EXAMINATION OF 1894

SILAPPADHIKARAM.

PUKARKANDAM.

---

10. NADUKANKATHAI

நடுகற்காதை WITH

HE COMMENTARY

OF

ADIARKKUNALLAR

Edited with Notes

BY

V. SAMINATHA AIYER,

TAMIL PANDIT, GOVERNMENT COLLT KUMBAKONUM.

Madras:

PRINTED AT THE MEMORIAL PRESS.

1894.

Price per copy As. 8.

முகவுரை.

"சந்தனப் பொதிகைத் தடவரை சேர்தமிழ்ப்
பரமா சாரியன் பதங்கள்
நிரை ... பகர்ந்துரைத் திகழ்ந்தார பொருட்டே."

தமிழ்ப்பாணரையினுள்ளை பழைய காப்பியமைந்தனுள் ஒன்றாகிய சிலப்பதிகாரமென்பது சேரமுனியாகிய இளங்கோவடிகளாலியற்றப்பட்டது; களவியற்பொருள்கண்ட கணக்காயனார் மகனார் நக்கீரனார் முதலிய உரையாசிரியர்களால் மேற்கோள்காட்டப்படும் பாண்டியநாட்டுச் சங்கப்புலவர்களுள்ளனரு; சோழ சுவை பொருட்சுவைகளிற் சிறந்துள்ளது; எவ்வெவ்வகைப்பாற்பட்ட செய்யுளினும் அவ்வப்பொருளோடு நிரம்பி கண்டோர் மனத்திற்குத் தோற்றுமவண்ணம் கோவுபுலப்படுத்துந் தெள்ளிய இனிய நன்னடையுடையது; கோவலனும் மனைவியுமாகிய கோவலன் கண்ணகி என்பவருடைய சரித்திரத்தை விரிதுகூறுவது; தமிழ்நாட்டரசர் மூவருடைய இராஜதானிகளாகிய புகார்(=காவிரிப்பூம்பட்டினம்)மதுரை வஞ்சியெனனும் மூன்றன பெருமைகளையும்விளக்குவது; பண்டைக்காலத்திருந்த பலவகை மாந்தருடைய ஒழுக்கமுதலியவற்றை இக்காலத்தார் எளிதில் தெரிந்துகொள்ளுதற்குச் சிறந்த கருவியாகவுள்ளது; அரசர் நீதியிற் சிறிது பிழைப்பினும் உலகை அறக்கடவுள் கூற்றாயதினை கொல்லுமென்பதும், கற்புடைமகளிரை யகக்கோளையன்றித் தேவரும் முனிவருந் துதித்தல் இயல்பெனபதும், இருவினையும் செய்தமுறையே செய்தோனை நாடிவந்து தம்பயனை நுகர்விக்குமென்பதுமாகிய இம்மூன்றினையும் இவ்வுலகத்தாக்குத் தெரிவித்தற்பொருட்டே இளங்கோவடிகளாற் செய்யப்பட்டது; மேற்கூறிய மூன்றுபகுதியையும் சிலம்புகாரணமாகத்தெரிவித்தலின், இந்நூல் சிலப்பதிகாரமென்னும் பெயர்பெறுறது.

இன்னும இந்நூல், முத்தமிழும் விரவப்பெற்றதாதலின் இயலிசைநாடகப்பொருட்டொடர்நிலைச்செய்யுளென்றும், நாடகவுறுப்புக்களை உடைத்தாதலின் நாடகக்காப்பியமென்றும், உரைப்பாட்டும இசைப்பாட்டும் இடையிடையே விரவப்-

முகவுரை.

றதாதலின் உரையிடையிட்டபாட்டுடைச்செய்யுளென்றும் பெயர்பெறும்.

இக்கணதாடக்ககாலமும் இளங்கோவடிகள் காலமும் ஒன்றென்றும் இது முதலில் தமிழிலேதான் அவராற்செய்யப்பட்டதென்றும் இந்நூற்பதிகச்செய்யுளாலும், வரந்தருகாதையாலும் விளங்குகின்றமையின், இச்சரித்திரம் வேறுபாஷையிலிருந்து வந்ததென்று சொல்வதற்கிடமிலை.

இச்சிலப்பதிகாரம், இளங்கோவடிகளால் தான்செய்யப்பட்டதற்குக்காரணமும கதைச்சுருக்கமுமடங்கியபதிகச்செய்யுளால் முதலிற்பெற்று, மங்கலவாழ்த்துப்பாடலமுதலிய பத்துறுப்புக்களையுடைய புகார்காண்டமும், வாழ்கொண்சாலைமுதலிய பதின்மூன்றுறுப்புக்களையுடைய மதுரைக்காண்டமும், குன்றக்குரவை முதலிய ஏழுறுப்புக்களையுடைய வஞ்சிகாண்டமுமாய்ப் பிரிக்கப்பட்டுள்ளது. இதில் இயற்றமிழின பாகுபாடான வெண்பா அகவற்பா கலிப்பா எனபனவுங், இசைத்தமிழின் பாகுபாடான ஆற்றுவரிமுதலியபாகமும், நாடகத்தமிழின பாகுபாடான உரைப்பாட்டுக்களும் வருகின்றன. இவற்றுள் மிகுதியாகவுள்ளது அகவற்பாவே.

இந்நூற்கு அரும்பதவுரையென்றும், அடியார்க்குநல்லாருரையென்றும் இரண்டுரைகளுண்டு. அவற்றுள், அடியார்க்குநல்லாருரையிலுள்ள சிலகுறிப்புக்களால் அரும்பதவுரை முற்றியதென்று தெரிகிறது. இப்படியுள்ள அரும்பதவுரையிலுள்ள சிலகுறிப்புக்களால் அவ்வுரைகருவூர்நூலுக்குப் பழைய வுரையொன்றிருந்ததாகவுந்தெரிகின்றது. அவ்வுரை இக்காலத்தில் கப்படவில்லை. இந்நூலிற் சிலசில இடங்களில் அரும்பதவுரையாசிரியர்கொண்டபாடமே வேறுகவும், அடியார்க்குநல்லார்கொண்டபாடம் வேறுகவுமுள்ளன. அவை அவ்வவ்விடத்துள்ள உரைவேறுபாடுகளால்நன்குபுலப்படும.

அரும்பதவுரை, ஆங்காங்குள்ள தெரிசாற்களின்பொருட்டு மட்டுமே ஒருவாறுபுலப்படுத்திச் சுருங்கியவிடத்து மேற்கோள்களையுடையதாய் மிகச்சுருக்கமாக இந்நூல்முழுமைக்கும் எழுதப்பட்டுள்ளது. அவ்வுரையாசிரியர்பெயரும் அவரிருந்தவிடமும் அவர்காலமுதலியனவும் ஒருவாற்றானுந்தெரிந்துகொள்ளக்கூடவில்லை.

அடியார்க்குநல்லாருரை, அவ்வரும்பதவுரையைப் பெரும் பாலுந்தழுவியும், சிறுபான்மை மறுத்தும், சிலவிடத்துப்பத வுரையாயும், சிலவிடத்துப்பொழிப்புரையாயு மெழுதப்பட்டு; ஆங்காங்குச்சானலையம் பொருளையங்களை இனிதுபுலப்படுத்தி உரியவிடங்களில் இயற்றமிழ்ப்பகுதியாகிய ஐந்திலக்கணங்களை யும், இசைத்தமிழ் நாடகத்தமிழ்ரின பகுதிகளையும் பலதூல் மேற்கோண்முகமாக நன்குவிளக்கும் விசேடவுரையோடுகூடி இயன்றமட்டில் ஒவ்வொன்றையும் நன்குதெளிவித்து மிகவிரி வாக அமைந்துள்ளது. இவ்வுரையாசிரியரிடமும் காலஞ்சென் றியனவும் நன்குவிளங்கவில்லை. அதிற்றான் இவ்வுரையாசிரிய ர்க்கு நிகண்டையாக்கொலரென்ற ஒருபெயருண்டென்பதும், இவ்வு ரை அக்காலத்திருந்த பொய்யடிமைப்புலவோரென்ற ஒரு ..ரபுவாற் செய்யிக்கப்பட்டதென்பதும பிறபுள்ள பழைய ..ரைச்சிறப்புப்பாயிரச் செய்யுட்களால் தெரிகின்றன.

நேரிசைவெண்பா.

பருந்து தழுவுபடைப் பாட்டு மெழுதாதும்
பொருந்துவினை யல்லாப் பொருளும் - திருந்திப்
பழையார்க்கு நல்லாரைப் பத்தரான னன்னூ
லுடையார்க்கு நல்லாரென்பர் பலர்.

மட்டுனகாலித்துணை.

ஒருந்தாய்மொழாருழையன்றி மற்றுள்ளதுத்துச
சேயன்மிலாந்த கூலப்பறி வாதந்திறை சேர்ந்தபொரு
ளாருப் பிறவிய வின்றுணைத் தாமரடையார்க்குநல்லாரி
காருந் தருபுடையினரா னிடம்பையர் காவலனே.

காற்றைப்பிடித்துக் கடத்தில் வைடைத்திக் கழியபெருங்
காறணைக் குமணைப்சுப் வார்செய்ணை போலுமக் காலமெலுங்
கூற்றைத் தபிர்த்தாரர் பொப்பண்ணை காங்கெயர் கோனைத்த
சோற்றுச் செருக்கலல வேதமிழ மூனறுனை சொல்வித்ததே.

அடியார்க்குநல்லாருரையில் சிலவிடத்திருந்த கடினமான சொற்களைமாற்றி அவ்வவ்விடத்தில் வேறுசொற்களையமைத் தும், ஒருவாற்றாலும் விளங்காதனவும் இடக்கர்ப்பொருளை யுடையனவுமாகிய சிலவாற்றை நீக்கியும், மாணாக்கர்களுக்கு விள ங்குதற்பொருட்டு நானமாக எழுதப்பட்ட குறிப்புக்களைச் சிலவிடத்து அடியார்க்குநல்லாருரையினுள்ளனாச்சேர்த்திருப்

முகவுரை.

பதன்றிப் பழைய அரும்பதவுரையில் வேண்டியபாகங்களையும் அவ்வவ்விடங்களில் அவற்றின் பின்னே சேர்த்தும் பதிப்பித்திருக்கிறேன்.

இங்ஙனம்,

உத்தமதானபுரம்

வே. சாமிநாதன்.

சிலப்பதிகாரநூலாசிரியராகிய

இளங்கோவடிகள் வரலாறு.

இந்நூலாசிரியராகிய இளங்கோவடிகள் சேரநாட்டில் வஞ்சிநகரத் திருந்து அரசுசெய்த சேரலாதனென்னும் அரசனுடைய புத்திரர்; சேரன் செங்குட்டுவனுடைய தம்பி; இதனால் இவர் முதலில் இளங்கோவென்று சொல்லப்பட்டுப் பின்பு துறவுபூண்டமையால் இளங்கோவடிகளெனறு பெயர்பெற்றார்; இவர் துறவுபூண்டதற்குக்காரணம் சிலப்பதிகாரப்புத்தகத்தின் கo-ம் பக்கம் உசூ-ம் வரி முதலியவற்றாலும், இவர் இந்நூல்செய்ததற்குக்காரணம் இந்நூற்பதிகத்தின் முதற்பாகத்தாலும் விளங்கவுணரப்படும்; துறவு பூண்டபின்பே இந்நூல இவராற்செய்யப்பட்டது. பத்தினியைத் தெய்வத்தலையுட்கொண்டும் இக்கதைமுகமாகச் சிலதருமங்களை உலகத்தார்க்குத்தெரிவிக்கவேண்டுமென்பதையெண்ணியும் இவர் இந்நூலைச்செய்தனர்; இவர் தமதுமாதிலுள்ளாருடைய உயர்ச்சியைக்கூறுதலேபோலவே ஏனைச்சோழபாண்டிபர்களுடைய உயர்வுகளையும் சிறிதும் வேறுபாடின்றி நன்றாகச் சொல்லியிருத்தலால், இவருடைய துறவின்றூய்மை நன்குபுலப்படுகின்றது. இந்நூலின இடையிடையே சொலலப்படுபவர்களுடைய சரித்திரங்களுக்குப்போந்த நற்பயனையும் தீப்பயனையும் ஆங்காங்கு உலகத்தாரைநோக்கிச் சொல்லப்போதல் இவர்க்கியலபு. பின்னும் யாரேனும் மிக்கதீங்கு புரிவித்ததாகச் சொல்லும்பொழுது அத்தீங்குபுரிவித்தற்குக்காரணமாக முற்பிறப்பில் அவர்கள தீவினைசெய்ததைக்குறித்தும் நல்வினைசெய்யாமையைக்குறித்தும் அப்பொழுதப்பொழுது இவர்மனம் இரங்கிற்றென்பதை ஆங்காங்குள்ள பாடல்கள் புலப்படுத்தும். இவர் மலைநாட்டினராதலால இந்நூலில அந்நாட்டுச்சொற்கள்பல அவ்வவ்விடத்துக் காணப்படும.

இவர்காலமும் சிலப்பதிகாரக் கதைநிகழ்ந்தகாலமும் ஒன்றுதலாற் காவிரிப்பூம்பட்டினத்திலும் மதுரையிலும் நடந்த சரித்திரங்களை அறிந்தோர்வாய்க்கேட்டும் மலைநாட்டினிகழ்ந்ததைத் தாம் நேரிற்கண்டும் இந்நூலைச்செய்தனர். இங்ஙனம்செய்தாரென்பதை இந்நூற்பதிகத்தாலும், உரு-வது காட்சிக்காதையாலும், கo-வது வரந்தருகாதையாலும், விளங்கவுணர்க.

இக்கதையோடு தொடர்புள்ளதாகிய மணிமேகலையின் கதையையும் இந்நூலினிறுதியிற்சேர்த்துப் பாடக்கருதியிருந்த இவர், அக்கதையை மணிமேகலைப்பெயரால் ஒரு காப்பியமாகயான் செய்துமுடித்தேனென்று மதுரைத்தமிழாசிரியர் கூலவாணிகன் சாத்தனார் சொல்லக்கேட்டு அவ்

வாறு செய்யாதுவிடுத்தனர். இதனைச் சிலப்பதிகாரத்தின கரம்ப பக்கம் நூம் வரிமுதலியவற்றிற்காண்க.

சமயம்.—உசு - வது கால்கோட்காதையிற் செங்குட்டுவன் இமயஞ் செல்லப் புறப்பட்டபொழுது [அடி நுசு-நுஎ] "நிலவுக்கதிர் முழுத்த மீனி நுஞ் சென்னி,யுலகுபொது யுருவத் துயர்ந்தோன் சேவடி,மறுவில்சீர் வஞ்சி மாலை யொடுபுனைஉம், நிலமருசாச சென்னி யிளமருவிலங்கு மகனென்று" எனவும், பின்பு [அடி சூஉ-சூஎ] "ஆடக மாடத் தறிதுயி லமர்ந்தோனம், சே டஞ்சொண்டு சிலம்பின் றோற்றத்து, தெண்ணீர் கரந்த செஞ்சடைக் கடவுள், வண்ணச் சேவடி மணிமுடி வைத்தலி, னுலகுவா யுண்மையிற் புபத்தி த், தாங்கின ரென்றி" எனவும், செங்குட்டுவனோக்கி, இமயத்தினின்றும் வந்த முனிவர்கள் கூறியதாக [அடி சுஅ-சுசு] "செஞ்சடை வானவ ளருவி னில் விளங்க, வஞ்சித் தோன்றிய வானவ கோவாய்" எனவும், வரற்கருகா தையில் மாடலன்கூறியதாக [அடி கசுக-கசூஉ] "ஆலி றுவர்ப்போ வஞ்சி ளிற்றோன்றி, மாநிலம் விளக்கிய யானைவ ருதலினன்" எனவும் இவரே கூறி யிருத்தலாலும், இவர் அவனுடைய தம்பியாதலாலும இவரது சமயம் வை வமெனறு தேறற்றுகின்றது. இவருக்கு ஏழுகளென்ற பெயர் வந்திருத தலைக்கொண்டும், பதிகத்தில் "குணவாயிற் கோட்டத் தாகுதுறைத் திருந்த" என்பதிற் கோட்டமென்றதற்கு 'அருகன்கோயில்' என்று அடியார்க்குநல் லார் பொருள்செய்திருத்தலைக்கொண்டும், இந்நூலிற் சிலவிடத்துச் சைன மதக்கொள்கையை இவர் மிகுத்துச் சொல்லியிருத்தலைக்கொண்டும இவ ரதுசமயம் சைனமென்று கூறுவாருமுளர்.

காலம்.—"உரையிலாட யிட்ட பாட்டினைடச் செய்யு, னுரையசா லெ.க ளருளமதிலாக்,கூல வாணிகன் சாத்தன் கேட்டனன்" என இந்நூலுடதிகத் திறுதியிலும் "இளங்கோ வேத்த னருளிக் கேட்ப, வளங்கெழு கூல வாணி கன் சாத்தன், மாவண் டமிழ்த்திரு மணிமே கலையென, பாவிற பாட்டிலு ளறிய வைத்தனன்" என மணிமேகலையினுடையபதிகத்திறுதியிலும் கூறியிருத் தலால், இளங்கோவடிகளும் சாத்தனாரும் ஒருவர்முனனிலையிலொருவர் முறையே சிலப்பதிகாரத்தையும் மணிமேகலையையும் இயற்றினரென்ற போதருதலாலும், தொலகாப்பியப்பொருளதிகாரச் செய்யுளியலில், "முகா ரை முதலா" என்னும் சூத்திரத்தின் விசேடவுரையில் "சித்தலைச்சாத்தனா ராற்செய்யப்பட்ட மணிமேகலை" என உச்சேதற்புலவர்கொள் ளச்சிலரர்க் கினியரெழுதியிருத்தலால் மேற்கூறியசாத்தனார் கடைச்சங்கப்புலவருளொ ருவராகிய சீத்தலைச்சாத்தனரென்று தெரிதலாலும், இளங்கோவடிகள் காலம் கடைச்சங்கப்புலவர் காலமென்று நிச்சயிக்கப்படுகிறது. அக்கடை ச்சங்கப்புலவருட் சிறந்தவரும் மதுரைக்கணக்காயனார் மகனாருமாகிய நக்கீரனார் இறையனாரகப்பொருளுக்குத் தாம் இயற்றியவுரையில் இந்நூ லிற் கானல்வரியிலுள்ள "நினங்கொள்", "துறைமேய் வலம்புரி", "நோந்

தாங் காதலர்", "புணர்துணை" என்னும் பாடல்களையெடுத்து உதாரணமாகக் காட்டியிருப்பதுங்காண்க.

இளங்கோவடிகளுக்குத் தமையனாகிய செங்குட்டுவன் பத்தினிக்கடவுளாகிய கண்ணகியார்க்குக் கோயில்சமைத்து விழாக்கொண்டாடியகாலத்து இலங்கையரசனாகிய கயவாகுவென்பவன் உடனிருந்தானென்று வரந்தரு காதையாலும், அக்கயவாகுவும் இலங்கையிற் கண்ணகியார்க்குக் கோயில் கட்டுவித்து விழாக்கொண்டாடினனென்று இந்நூற்பதிகத்தைச்சார்ந்த உரைபெறுகட்டுரையாலுந் தெரிகின்றன. இற்றைக்குச் சற்றேறக்குறைய கஎசுஅ - வருடங்களுக்குமுன்பு கயவாகுவென்னும் மாசாத்தனொருவன் இருந்தானென்று இலங்கைச்சரித்திரத்தாற் (=மகாவம்சம்) புலப்படுகின்றது. பின்னும் சற்றேறக்குறைய எசுஅ-வருடங்களுக்கு முன்பு கயவாகுவென்னும் மற்றொருசாசனிருந்ததாகவும் அச்சரித்திரத்தால் தெரியவருகின்றது. ஆயினும், இந்நூலிற் கூறிய வேறு சில அரசர்களுடைய காலத்தை ஆராயும்போது இந்நூலாசிரியர்காலம் இரண்டாங்கயவாகுவின் காலத்திற்கு முந்தியதாகத் தெரிகின்றதையின், இவர்காலம், மூன்றாங்கயவாகுவின்காலமெனத் துணியப்படுகிறது.

சிலப்பதிகாரவுரையாசிரியராகிய
அடியார்க்கு நல்லார் வரலாறு.

இவருடைய வருணம் சமயம் ஊர் காலம் ஆகிய இவற்றுள் ஒன்றும் புலப்படவில்லை; ஆனாலும் நச்சினார்க்கினியரால் மறுக்கப்படுவனவற்றுட் சில இவருடையகொள்கையாக இருத்தல்பற்றி இவர்காலம் நச்சினார்க்கினியருடைய காலத்திற்கு முந்தியிருக்கலாமென்று ஊகிக்கப்படுகிறது. இவர், மற்றையுரையாசிரியர்கள்போலன்றித் தாம் எடுத்துக்காட்டுமேற்கோள்களை இன்னஇன்ன நூலின்கண் உள்ளனவென்று பெரும்பாலும்புலப்படுத்தியிருக்கிறார். சிலசிலவிடத்துப் பதவுரையோசனையும் அலங்காரமும் மையப்பாடுகளும் வேறு சில குறிப்பும் இவராலெழுதப்பட்டுள்ளன. ஐந்திணைக்குமுரிய முதற்பொருள் கருப்பொருள உரிப்பொருள் ஆகிய இவற்றுள் ஒவ்வொன்றின்வகை பலவற்றிற்கும் இந்த நூலிலிருந்தே உதாரணங் காட்டி விளக்கியிருக்கின்றனர். இந்நூல்செய்யப்படும்பொழுதிருந்த இசைத்தமிழ்நாடகத்தமிழ்நூல்கள் பலவும்இவர்காலத்து இறந்துபோனமையால், இவர், அவ்விசைநாடகப்படுதிகட்கு **இசைநுணுக்கம் இந்திரகாளியம் பஞ்சமரபு பரதசேனாபதீயம் மதிவாணர்நாடகத்தமிழ்நூல்** என்னும் ஐந்நூல் களையுமே மேற்கோளாகக்கொண்டனர். இந்நூலுள் இந்திரவிழவூரெடுத்த காதையில் [அடி சுசு] "சித்திரைச் சித்திரைத் திங்கள் சேர்ந்தென" என்

றும், கட்டுரைகாதையில் [அடி கஉங - கஉநு] "ஆடித் திங்கட் பேரிருட் பக்கத், தழல்சேர் குட்டத் தட்டமி ஞான்று, வெள்ளி வாரத்து" என்றும் சொல்லப்பட்டுள்ள காலவமையறையைக்கொண்டும், அவ்வவ்விடத்துள்ள ஒவ்வொரு குறிப்பைக்கொண்டும். மணிமேகலை கண்ணகி இருவரும் இன்னகாலத்துக் காவிரிப்பூம்பட்டினத்திருந்து புறப்பட்டார்களென்றும் இன்ன இன்னகாலத்து இன்னது இன்னது செய்தார்களென்றும் எழுதிக்கொண்டுபோகிறார். *[உ0நு - ஙசு ; உஙo - கஉ ; ஙo எ-உ0 ; ஙo அ - உசு ; ஙஙஙு - உங; ஙஙசு - கக ; ஙசசு - நு] இவருடைய உரைநடை சிறசிலவிடத்து எதுகைமோனைமுதலியவற்றோடு கூடி இனியசுவை பயந்து செய்யுளைடையாகவமைந்துள்ளது. இந்நூலுள் ஒவ்வொருபகுதிகஅஃதத்தனித்தனியே படிப்போர்க்கு அவ்வப்பகுதிகள் ஆங்காங்குள்ளவைகளாலேயே புலப்படவேண்டுமென்பது இவர் கருத்தாதலால் முன்னெழுதியவற்றையே பின்னுமெழுதுவர். அதனை இவ்வுரையிற் பலவிடத்திங்காணலாம். இவர் கருத்து இன்னதாதலைச் சிலப்பதிகாரப்புத்தகத்தின் ஙசஉ-ம் பக்கம் ஞ்-வதுவரிமுதலியவற்றிற்காண்க.மூலத்திலெவ்விடத்தேனும் திசைச்சொற்கள் வந்திருப்பின் அவற்றைத் தனித்தனியே யெடுத்துக்காட்டி இன்னசொல்லின்னாடட்டுவழக்கென்றும், அக்காலத்துவழங்கிய பழமொழிகளின்கருத்தெவ்விடத்தேனும் வந்திருக்குமாயின் அவற்றைத் தனித்தனியேயெடுத்துக்காட்டி இன்னது இன்னபழமொழியென்றும் புலப்படுத்துவர். ஒருதலையாகப்பொருள்கொள்ளாது பலரும் தத்தமக்குத் தோற்றியவாறெலாம்பொருள்கொள்ளக்கிடந்த போற்றியென்பதை இவர் இகாவீற்று வியங்கோளாகக்கொண்டு போற்றுவாயாகவென்று பொருள்செய்திருக்கிறார்[ஙகக-கஙு.];[சச்சிலர்க்கினியரும் காட்டியென்பதை இகாவீறு வியங்கோளாகக்கொண்டார்; சிந்தாமணி, கோவிந்தையாரிலம்பகம், நுஅ.]. இவர், 'கானல்வரியில் விரியக் கூறுதும்' [எக-இ ; ஙஉ - நு] என்றும, 'பூன்னாஅணியென்பதனுட்கூறினும்' [உ0க - கச.]என்றும் எழுதியிருத்தலால், இவர் கானல்வரிக்கு உரை செய்திருந்தனரென்பதும், 'அழற்படுகாதைக்கண்ணே விரித்துக்கூறுதும்' [கூஎ - உக.] என்றும், 'கட்டுரைகாதையுள் விரிபக்கூறுவாம்' [உ0சூ-சூ.] என்றும் எழுதியிருத்தலால், கட்டுரைகாதை முதலியவற்றிற்குடை இவர் உரைசெய்திலரென்னுமியிருதாரென்பதும் வெளியாகின்றன.

---

* இங்கே காட்டிய இவ்விரண்டெண்களுள், முன்னது சிலப்பதிகார அச்சுப்புத்தகத்தின் பக்கத்தையும், பின்னது அப்பக்கத்துள்ள வரியையும் புலப்படுத்துவன.

சிலப்பதிகாரக் கதைச் சுருக்கம்.

[க.—*புகார்காண்டம்.]

சோழவளநாட்டிற் காவிரிநதி கடலொடுகலக்கும் பூம்பழுகமென் றுரைக்கப்படுவதும் சோழர்களுடைய பழைய இராசதானியாகவுள் ளதும் பெரியோர்களாற் சிறப்பித்துப் பாராட்டப் பெற்றதுமாகிய காவிரிப்பூம்பட்டினத்தில் சோழன்நெடுமுடிகாலன் : அரசாட்சிசெய்துவருகையில், இப்பர் கவிப்பர் பெருங்குடியவென்னும் மூவகைவணிகருட் பெருங்குடி யர்குலத்திலுதித்தோருகிய மாசாத்துவானென்பான், தன்மகன் கோவல னுக்கு அந்நகரில் அம்மரபிலுதித்த மாநாய்கன் மகள் கண்ணகியை மிக்க சிறப்புடன் மணம்புரிவிக்க, கோவலன் கண்ணகிபால் மிகவும் அன்புவை த்து நலம்பாராட்டி இன்புற்றுத் தருக்கி மகிழ்ந்து நடக்குநாடகளில், ஒரு நாள், அக்கோவலன்முயாகிய பெருமகனைக்கிழத்தியென்பவள், கோவலனும் கண்ணகியும் இல்வாழ்க்கையைச செவ்விதாகநடத்திக் கைதேர்ந்து உயர் ச்சியடற்றுவிளங்குதலைக் காணவெண்ணி வேறொருமாளிகையில் இல்லற த்துக்குதவுவேண்டும் பொருள்களைவிரும்பி வேலைசெய்பவர்களையும் நியோ கித்து அவ்விருவரையும் அனுப்பிவந்த, அவர்கள் மனவொருமையோடு அதி லிருந்து அறவோர்க்களித்தல் அந்தணரோம்பல் துறவோர்க்கெதிர்தல் முதலியவற்றைச்செய்து இல்வாழ்க்கையை ஒழுங்காக நடத்திவருவாராயி னர்; இவ்வாறு சிலவருடங்கழிந்தன.

இப்படியிருக்கையில், கோவலன், மிக்கஅழகுடையவளும் ஆடல்பா டல் முதலியவற்றில் மிகத் தேர்ச்சிபெற்றவளுமாகிய மாதவியென்னும் நா டகக்கணிகையை விரும்பித் தன்பாற்புல்ல பலவகைப்பொருள்களையும் நாள் தோறுங்கொடுத்து அவளொழியும் இடைவிடாது மருவி மகிழ்வாரையினன். கண்ணகி பரிவாற்றாதவளாகி அவ்வாறந்தனைச் சற்றும் வெளிப்படுத்தா மல் அவன்வரும் நேரமேதனும் வெறுப்பினறி இல்லறவொழுக்கத்தை வழுவா தே நடத்திவந்தாள்; அக்காலத்து வழக்கப்படி அந்நகரத்தில் இந்திரனுக்கு த்திருவிழாநடத்தப்பட்டது. அதன்முடிவில் அந்நகரத்தார் தத்தம் பரிவார ங்களோடுங் கடலாடுதற்குச் சென்றார்கள்; கோவலனும் மாதவியுடனே கடற்க ரையையடைந்து ஓரிடத்திலிருந்து அவள்கையினிருந்த வீணையைவாங்கிப் பல யிசைப்பட்ட வரிப்பாட்டுக்களைப் பாடிக்கொண்டு அவ்வீணையை வாசித்தான்; அவன்பாடியபாட்டுக்கள் பலவகைப்பட்ட அகப்பொருட்சுவையைத் தழுவி யிருந்தமையின், மாதவி, 'இவன் வேறுமகளிர்பால் விருப்புடையன்' என் றெண்ணிப் புலந்து அவள்கையிலுள்ள வீணையைவாங்கித் தான் வேறுகுறிப் பில்லாதவளாகவிருப்பினும் அவன்வேறுகுறிப்புள்ளவருகத் தனக்குத்தோற் றினமையின், தானும் வேறுகுறிப்புடையாள்போலவே அகப்பொருட்சுவை யைத்தழுவிய பலவகைப்பட்ட வரிப்பாட்டுக்களைப் பாடிக்கொண்டு அவ் வீணையை வாசித்தாள்; அதனைக்கேட்டகோவலன், வேறொருவர்மேல்மனம்

---

* புகார் - காவிரிப்பூம்பட்டினம்.

வைத்து இவள்பாடிரூனென்றுணர்ணனி ஓழுப்விபோயிம்முயற்சியால் வெறுப்புற்று அவளோடு அளவளாவாமல் தன்னிடையடைந்து, நேவர்திய ன்னும்பார்ப்பனத்தோழியோடு சல்லாபருந்தெய்தாண்டிருந்த கண்ணகியைக்கண்டு அவளுடன் பள்ளியறையிற்புகுந்து அவள் மேன்வாட்டத்தையும் மனவருத்தத்தையுந்தெரிந்து, 'பொய்யை மெய்யாகக்காட்டியொழுகும் பரத்தையோடுமருவி ஓழுகியகாரணத்தால முன்னேர்தேடிவைத்த பொருட்குவியல்களினையெல்லாம தொலைத்து வறுமையடைந்தனை, அஃதெனக்கு மிகவும் நாணத்தருகின்றது' எனறுசொன்னான். கண்ணகி, மாதவிக்குக்கொடுத்தற்குப் பொருளில்லாமையால் தளர்ந்துசொன்னவென்று கருதி, 'அழியாயனிடத்து இரண்டு சிலம்புளவாம்; அவற்றைக் கைக்கொண்டருள்க' என்று சொன்றாள்; அவன், 'மதுரையையடைந்து இச்சிலம்பை வாணிகமூதலாகக்கொண்டு வியாபாரஞ்செய்து பிழைக்க பொருள்தேடித்தற்கெண்ணினேன்; நீயும் வல்லவென்கு' எனறான்; அவரும் சமாதானிக்க, கோவலன் அன்றிரவின் கடையாமத்திற் கண்ணகியையழைத்துக்கொண்டு ஓருவருமறியாதபடி புறப்பட்டுக் காவிரியினை வடகரை வழியாக மேற்கேசென்று ஓரு பூஞ்சோலையையடைந்து அதில் தவஞ்செய்துகொண்டிருந்த ஜிரு கதசமயத் தபோதிரோமணிய கவுந்தியைக்கண்டு வணங்கி, 'மதுரையிலுள்ள பெரியோர்களினால் அறநூறுகேள்வுற்றோம்; அடிகட்கு உடன்வருவேன்' எனறு சொலலிய அவரோடும் வழிக்கொண்டு அரங்கமடைந்து அங்குவந்த சாரணர்களைத்தரிசித்து முடிமேறிக் காவிரியின் தென்கரைசேர்ந்து ஓருபொழிலிலிருந்தான்; அப்பொழுது அங்குவந்த கண்ணகியையும் கோவலனையும் அவமதித்துப்பேசிய ஓருபத்தினையையும் ஓருதூர்த்தனையும் கவுந்தி நிவடிவங்கொள்ளுப்படி சபித்து, அவர்கள் அவ்வாறானதையறிந்து இரங்கிய கோவலன்கண்ணகியிவர்கள்வேண்டுகோளால் அவர்களுக்கு அவ்வழி வு ஓருவருடத்தில் நீங்கும்படி சாபவிடைசெய்தாள். பின்பு மூவரும் உறையூரையடைந்தார்கள்.

[உ.—மதுரைக்காண்டம்.]

அடைந்தவர்கள் அனறு அவ்விரவைக்கழித்து மறுநாடகாலையிற் புறப்பட்டுச் சிறிதுதூரஞ்சென்று ஓரிடத்திலிருந்த இடைச்சேரியிற் சங்குவந்த ஓரந்தணனால், வழிதெரிந்துகொள்ளப்பட்டு அப்பாற்செல்லுகின்றார்கள். மிகவும்விடாது ஓருநாட்காலையிற் கோவலன, கவுந்தியையும் கண்ணகியையும் ஓரிடத்தில் வைத்துவிட்டுக்காலைக்கடன்கழித்தற்பொருட்டு ஓருபொய்கையையடைந்து நிற்கையில், தன்பிரிவாற்றாதுவருந்திய மாதவியாலனுப்பட்டட்டு அவளோ லையுடன் காவிரிப்பூம்படுனத்தினின்றும் அங்குவந்த கௌசிகனென்னும் அந்தணனைக்கண்டு தன்பிரிவால் தன் தந்தை தாய் முதலியோர்களும் மாதவியும் படுகிறவருத்தங்களை அவனுலை தெரிந்து மிக வருந்தமுற்றுத் தான் புறப்பட்டதற்குக் காரணத்தையும் தன்வணைகத்தையும் தன்னுடைய நந்தைக்குச்சொல்லிப் பாதுகாத்திக்கொண்டிருக்கும்படி அவனையனுப்பிவிட்டுக் கவுந்தியையும் கண்ணகியையுமடைந்து அவர்களுடனை புறப்பட்டு இடையிற்

சந்தித்த பாணர்களுடன் அளவளாவி அவர்களால்வழியினளவும் தரிந்துகொ
ண்டுபோய் வைபையாறைறையடைந்து அதனைத்தாழுது புணையேறி அக்க
ரைசென்று மதுரையினமதிற்புறத்ததாகிய முனிவரிருக்கையில் தங்கினன்.

மற்றைநாடகாலையெழுந்து கயுரதினைய வணங்கித் தங்களுக்கு முன்பு
நேர்ந்த துன்பங்களைச்சொல்லி வருந்திப்பினபு அவள்நேற்றத்தேறிக் கண்
ணகியை அவள்பால்வைத்துவிட்டுத் தான் வாணிகஞ்செய்தற்குரிய இடமறி
தற்பொருட்டு மதுராநகரத்தின் உள்ளேசென்று அதன்வளங்களையெல்லா
ங்கண்டு மீண்டு கவுந்தியையடைந்து அங்கநிர்ச்சிறப்பு முதலியவற்றைச்
சொல்லி, பின்பு, அடிகேளவந்த தனதிட்டபாளருகிய மாடலனென்னுமந்தண
னோடு சல்லாபஞ்செயதுபின்வருந்தான். அப்பொழுது, கவுந்தி, அங்கு
வந்த நடைசுசியர் தலைவியாகிய மாதரியைக்கண்டி அவளது நல்லொழுக்
கத்தைநோக்கி, 'இவளிடத்திற் கண்ணகியை அடைக்கலமாகக்கொடுக்க
லாம்' என்று நிசயித்து அவளையழைத்துக் கண்ணகியின் கற்புமேம்பாட்
டையும் அவள்மென்மைத்தன்மையையும் உயர்ந்தோர்களாற் கொடுக்கப்ப
ட்ட அடைக்கலப்பிராட்டியைப் பாதுகாத்தோர் அடைந்தபயனையும் அவட்கு
வினாவுசசெலலிக் கண்ணகியை அவளிடம் ஒப்பிக்க, அவள் மகிழ்ச்சியு
டன் ஏற்று விடைபெறுமாக் கண்ணகியைக் கோவலனுடனழைத்துக்கொ
ண்டு ஆயர்பாடியடைந்து அவ்விருவரையும் புதிய
மனையொன்றிலடைவித்து மகவுபசரித்துத் தன்மகள் ஐயையென்பவளைக்
கண்ணகிக்குத் தோழியாகவைத்துச் சமைத்தற்குரியபொருள்கள் பலவற்
றையும் கொணர்ந்துகொடுப்பட் கண்ணகி அவற்றைச் செவ்விதாகச்சமை
த்து முறைப்படியுண்பிக்கக் கோவலன் இனிதாகவுண்டு கண்ணகியை அரு
கழைத்து அனைத்து, 'நீ நிற்பாரிடையில் வந்தஎன்னணிமம் தாய்
தந்தையர் எனனுடன்பழகியதுண்டோ? நீக்க செல்வத்தை அனுபவித்துக்
கொண்டிருந்த நாமை நிற்குக்கொடியவறுமைத்துயரனுபவித்தது கனவோ?
கனவாயினை, நிதற்குக்காரணமாகயுண்டு செய்த தீவினையாதோ? யான்
நுனைறுமதிந்திலேன்; யினேரமுமவிடோமாதுங்கூடிப் பிறரைப் புறங்கூறுங்
கூட்டத்திடருற்று நலலொழுக்கத்தைநீத்த மகாபாவியாகிய என
க்கு இனிற் நீக்கதிபனறி நற்கதியுன்டாமோ? இருமுதுகுரவர்க்கும் ஏவல்
செய்தலியாற்றேன்; உனைக்கும் தீங்குசெய்தேன்; இக்கூடாவொழுக்
கம் தீதன்று கூறிதுபயன்னையிலேன்' என்று பலவாறிரங்கி, 'சுற்றமுதலிய
வற்றைநீங்கி கானமுதலியவற்றையும் கற்பையும் பெருந்துணையாகக்கொ
ண்டு என்னோடுவந்து எனது தனிமைபத்தீர்த்த "பொனனே கொடியே
புனைதுயல் மகாதாய், நாணின் பாவாய் நீலைல விளக்கே, கற்பின் கொழுந்தே
பொற்பின் செல்வி" இனி, உன்றுணைடைய சிலம்புகளுள் ஒன்றைக்கொண்டு
போய் விரைவிலவிற்றுவருவேன்; வருமளவும் தனிமையால்வருந்துதலை
ஒழிவாயாக' என்றுசொலலி, ஒரு சிலம்பைவாங்கிக்கொண்டு அவள் தனியே
யிருத்தலைக்கண்டு மனமெவ்வந்தும்புதலாலே பெருகிய தன் கண்ணீரை அவள்
கண்டால் வருந்துவாளென்று மறைத்தவளாகி அவ்விடத்தைநீங்கிப் பிரிதற்

குத் தெளிவில்லாத மனமுடையவனுப்ச் சென்று எதிர்ப்பட்ட சோதிமித்தங் களை அறியாமற் கடைத்தெருவிற்புகுந்து எதிரே நாறு பொற்கொல்லர் பின்னேவர முன்வந்த ஒருபொற்கொல்லனைக்கண்டு இவன் அரசனுற் பெயர்பெற்றோனென்றெண்ணி அவனருகிற்சென்று, 'அரசனே றெலியனிதற் குத் தகுதியான சிலம்பினை விலைமதிக்கும் வல்லமையுடையாயோ' என்று வினவி, அவன் மிக்கபணிவுடன் தான்வல்லனுதலைக் குறிப்பிக்கக் கோவலன் தான்கொணர்ந்த சிலம்பைக் காட்டினான். அவன்பார்த்து, 'இந்நின அரசனுக்கு யான்தெரிவித்துவருமளவும் என்வீட்டிற்கு அயலதாகிய இவ்விடத்தே நீயிருந்' என்று ஓரிடத்தைக்காட்டிச் சிலம்பைக் கோவலன் அவ்விடத்தேயிருந்தான். சென்றபொற்கொல்லன் முன்பு அரசன்மனைவியின் சிலம்புகளுள் ஒன்றை வஞ்சித்துத் திருடிக்கொண்டமையாலே, 'யான் முன்பு வஞ்சித்துக்கவர்ந்துகொண்ட சிலம்பு எனவிடத்தேயுள்ளதென்று இராசாவுக்கு வெளிப்படுவதற்குமுன்னமே அதனேறு ஒத்த சிலம்பைக்கொணர்ந்த இப்புதியவனுல் என்மீதுண்டாகும் ஐயத்தைத் தீர்க்கலாம்' என்று தன்னுள்ளே நிச்சயித்துக்கொண்டு, தன்மனைவியின் மாடலமனையிற்சென்று தன்கோயிலைநீங்கி அவள்கோயிலை நோக்கிக் காமபரவசமுற்றுச் செல்லும் பாண்டியன் நெடுஞ்செழியனைக்கண்டு வணங்கிநின்றுதிரித்து, 'கண்ணகிகால் முதலியன இல்லாமலே கோயிற்கணிருந்த சிலம்பைத்திருடியவன் அடியேனுடைய சிறியகுடிலில் அச்சிலம்போடு மகப்பட்டான்' என்றுசொல்லப் பாண்டியன் உடனே காவலாளர்களையழைத்து, 'எனமனைவியின் சிலம்பு இவன்கூறிய கள்வனிடத்ததாயிருப்பின், அவனைக் கொலைசெய்தற்கு அச்சிலம்போடு மகப்பட்டுவருக' என்று சொல்லக்கருதியபடியே, விரைவாகவும் பலமாதலால் மயங்கி, 'அவனைக்கொன்று அச்சிலம்பினைக் கொண்டுவாருங்கள்' என்று கட்டளையிட்டான். பொற்கொல்லன் தன்னைவெட்டிக்கொல்லும் படைத்தலைவனென்று தன்னுள்ளே மகிழ்ந்து அக்காவலாளருடன்சென்று கோவலனைக்கண்டு அவனைநோக்கி, 'இவர்கள் அரசன்கட்டளையாற் சிலம்புகாணவந்தவர்கள்' என்றுசொல்லிக் கோவலனுடைய முகக்குறிமுதலியவற்றைக்கண்டு இவன் கள்வனல்லனென்றுசொல்லும் காவலாளரைநோக்கி இவ்வந்தணனைக் கள்வனென்று வறுபுறுத்தித்தற்குக காரணமுமுள்ளனவெதுக்களையெல்லாம் அவர்களுக்கு எடுத்துக்காட்டினான்; அப்பொழுது அவர்களுள் அறிவின்மையினுற் கொலையஞ்சாதொருவன் யிலைநாம்சென்று கோவலனைத் தன் கைவாளால்வெட்டிவீழ்த்துவன்.

இப்பால், கண்ணகியிருந்த இடைச்சேரியில் பலவகையான உற்பாதங்களுண்டாயின; அதுகண்ட மாதரிமுதலியோரால் உற்பாதசாந்தியாகத் திருமாலைக்குறித்துக் குரவைக்கூத்தாடப்பட்டது; அதன்முடிவில் மாதரி நீராடுதற்பொருட்டு வையையாற்றிற்குச் சென்றுள்; அப்பொழுது சிலம்பு திருடியவனென்று தெளிந்து கோவலனை அரசனேவலாளர் கொன்றசெய்தியை மதுரையிலிருந்துவந்த ஒருத்திசொல்லக்கேட்டுக் கண்ணகி பதைபதைத்து மூர்ச்சித்துப் பலவாறுபுலம்பித் தானும்அவனுடனிறத்தற்குத் துணிந்து

இடைச்சியர் மத்தியில்நின்று சூரியனைநோக்கி, 'கதிர்ச்செல்வனே! நீயறிய என்கணவன் கள்வனோ' என்றாள்; அவன், 'நின்கணவன் கள்வனல்லன்; அவனைக் கள்வனென்ற இவ்வுரை வினாவில் தீயுண்ணும்' என்று அசரீரியாகக் கூறினன். அதைக்கேட்ட கண்ணகி மிகுந்த கோபத்தோடு தன்னிடமிருந்த மற்றொரு சிலம்புடனே புறப்பட்டுக் கண்டார்நடுங்கும்படி வீதிவழியேசென்று ஆங்குள்ள மகளிரைநோக்கிப் பலவாறு புலம்பி, 'என்கணவனை முன்போலக்கண்டு அவன்சொல்லும் நல்லுரையைக் கேட்பேன்; அங்ஙனங் கேளாரையின், என்னை இகழுமின்' என்று சபதஞ்செய்துகொண்டு சென்று வெட்டுண்டுகிடந்த கோவலனைச் சிலர்காட்டக்கண்டு அளவில்லாத துயரத்தையடைந்து அவனை முன்னிலைப்படுத்திப் பலவிதமாகப் பிரலாபித்து அவனுடம்பைத் தழுவிக்கொள்ள, அவ்வளவில், அவன்உயிர்பெற்றெழுந்துநின்று மதிபோன்ற முகம்வாடியதேயனறுசொல்லிக் கையாலே அவள் கண்ணீரைமாற்ற, அவள் அவனுடைய பாதங்களை இரண்டுகையாலும் பூண்டுகொண்டு பணிந்தாள்; உடனே அவன் நீ இங்கிருக்கவென்றுசொல்லி அவ்விடம்விட்டுப் பிரிந்து சுவர்க்கம்புகுதற்குத் தேவர்களோடுகூடிச்சென்றான்.

இவ்வாறு இப்படியிருக்கப் பாண்டியன்நெடுஞ்செழியன்மனைவி, தீக்கனாக்கள் பலவற்றைக்கண்டுசென்று அவற்றைத் தன் கணவனோடு சொல்லிக்கொண்டிருந்தாள்; அப்பொழுது, கண்ணகிகோபந்தணியாதவளாய் அரண்மனைவாயிலையடைந்து வாயிலோலைதன்வரவை அரசனுக்கறிவித்து அவனனுமதிப்படி அவன்முன்சென்று, அவன் கேட்பத் தன் ஊர் பேர்முதலியவற்றையும், ஆராயாது கோவலனைக்கொல்வித்த கொடுங்கோன்மையையும் விரிவுறுமொழிவாகச்சொல்லிக் கோவலன் கள்வனல்லனென்று தெளிவித்தற்பொருட்டு, தன் சிலம்பினுள்ளேயுள்ளபரல மாணிக்கமென்றாள்; அவன், தன்தேவிசிலம்பின்பரல் முத்தென்று சொல்லி, கொல்லப்பட்ட கோவலனிடமிருந்துகிடைத்த சிலம்பை வருவித்துவரப்ப, கண்ணகி அதையுடைத்தாள்; உடைக்கவே அதனினின்றும் மாணிக்கப்பரல் தெறித்தது: அது கண்ட அரசன் நடுநடுங்கி, 'இற்ற பொற்கொல்லன் சொல்லைக்கேட்ட கோமான்மனையையுடைய நாமேறுவரசன்! நாமேறுவரசன்!! ஐயோ! படாதகழ்பெற்ற இந்தஅருமந்தகுலமென்றற்புழியடைந்ததே! என்னாயுள் நீளுமேறவழியக்கடவது' என்றுசொல்லி மிகவும்திக்கித்து மயங்கித் தானிருந்த ஆசனத்தில்வீழ்ந்து இறந்தான்; அதனையறியாதஅவன்மனைவி பாதிகாத்தருளவேண்டுமென்று கண்ணகி பாதத்தில் வீழ்ந்தாள்; வீழவே கண்ணகி, 'நான் பத்தினியாயிருத்தல் உன்மையாயின், இவ்வூரை அழித்துவிடுவேன்பார்' என்று சபதம்செய்து தனது இடக்கொங்கையை வலக்கையால்திருகியெடுத்து அதை அங்ஙகரத்தின்மீதெறிந்தாள்; எறியவே, அக்கினிதேவன் பார்ப்பனக்கோலத்தோடு வந்து, 'மகாபத்தினி! உனக்குப்பிழைசெய்தநாளில் இவ்வூரை எரித்துவிடும்படி முன்னமே ஓரேவல் பெற்றுளேன்; இப்பொழுது யானையழித்தல்வேண்டும்' என்று கேட்ப, அவள், "பார்ப்பாரறவோர் பசுப் பத்தினிப்பெண்டிர், மூத்தோர் குழவி யெனுமிவரைக் கை

விட்டுத், தீத்திறத்தார் பக்கமே சேர்கென்று" சொல்ல, அப்பொழுதே அங்
ஙகளில் அவள்சொல்லியவண்ணம் தீப்பற்றிக்கொண்டது. உடனே அந்தக
ளைக்காக்கும் வருணப்பூதங்கள் ஈன்றும் பெயர்ந்து சென்றன ; அந்நகரத்
துள்ள இடங்கள் பலவும் எரியத்தொடங்கவே அவ்வெம்மையை ஆற்றாதவ
ளாகி மதுரையின் அதிதேவதை கண்ணகிபால்வந்துநின்று அவளை நோக்கி,
"யான் இந்நகரிற்கெய்வம்; உனக்குச் சிலவற்றைசொல்லவேர்தேன்; அவ
ற்றை நீகேட்பாயாக ; இந்நகரத்து முன்பிருந்தபாண்டியர்களுள் ஒருவனோ
ணும் சிறிதும் கொடுங்கோன்மையுடையானல்லன் ; இந்நெடுஞ்செழியனும்
அத்தன்மையனே; ஆயினும் இதுவந்தவழலாற்றைச்சொல்லுவேன் : முன்பு
கலிங்கநாட்டிலுள்ள சிங்கபுரத்தரசனாகிய வசுவென்பவனும் கபிலபுரத்தர
சனாகிய குமரனென்பவனும் தம்முட்பகைகொண்டு ஒருவனையாருவர் வெல்
லக்கருதியிருந்தார்; அப்பொழுது சிங்கபுரத்துக்கடவுளாயிருந்துசென்று இரவி
பாகப் பண்டம்விற்றுக்கொண்டிருந்த சங்கமனென்றும் வணிகனென வந்த
ரத்தரசனிடம் மதாபுலனென்பவன் பகைவனுடைய ஏற்றவினைன்று கூறித்தூ
பகைவனுடைய ஏற்றவினைன்று கூறித்தூ அரசனுக்குக்காட்டிக் கொடுத்
விட்டான் ; அப்பொழுது அந்தச்சங்கமன்மகனாகிய கீரியனென்பவன் பாண்
ந்தியரமுற்றுப் பதினான்காம் நாள் படைவிடுதூமிலர்ந்து பின்பு ஒருமலையின்
மேலேறிக் கணவனைச்சேர்ந்தற்பொருட்டுத் தன்னுடைய உயிரைவிடுதற்கு
நினைத்தவள்,'எமக்குத் தின்பஞ்செயமேதார்மறுபிறப்பினுந்தம்பதியை
அடைவார்களாக' என்று சாபமிட்டுரைத்தாள்; அப்பாதனிக்கோவலனாகப்
பிறந்தான் ; ஆதலால் நீங்கள் நித்தின்பமடைந்தீர்கள் ; நீநிறைக்கூட்டது
ணலாவதுதினைத்தின் பகலென்றபின்பு உனதுடையகணவனுடனே கன்மதேசச்
சை" என்றுசொல்லி அவ்வாறே தற்சிலசெல்ல, பின்பு கண்ணகி மதுரையை
நீங்கி வையைக்கரைவழியே மேற்றிசைசேர்க்கிசென்று பசியோடடைந்து
அதிலுள்ள திருச்சுனைநீரைப்பருகி மதுரைமேலேறி ஒரு பெரும்வைகறை
ணிழலினின்று பதினாலாவதுதினத்தின் பகல்சென்றபின்பு அங்கேயெழுந்த
வழுவத்தேதாங்கிவந்த கோவலனைக் கண்டுகளித்து அவனுடன் விமானத்தில்
மேலேறித் தேவர்கள் போற்றும்படி சுவர்க்கமடைந்தாள்.

[ங.—வஞ்சிக்காண்டம்.]

கண்ணகி, இவ்வாறு கணவனோடும் விமானமேறிச் சுவர்க்கம் போகக்
கண்ட வேடுவமகளிரும் வேடர்களும் மிகுந்த ஆச்சரியமடைந்து தமது
குறிச்சியிற் கண்ணகிபோருட்டு ஒரு கோவைக்கூத்தெடுத்தார்கள்.
பின்பு அவ்வேடர்கள், இந்த அதிசயத்தைதத் தம்நாட்டு அரசனாகியசெங்கு
டுவனுக்குத் தெரிவிக்கவேண்டுமென்றெண்ணிப்பலவகையான காணிக்கைப்
பொருள்களோடும் தம்பி இளங்கோவடிகளோடும் புறப்பட்டு நான்வகைத்
தானையும்சூழவந்துபோராற்றங்கரையிலுள்ளமனற்குவியலிருக்குஞ்சேர
செங்குட்டுவனைக் கண்டுவணங்கிச் சொன்னார்கள் ; அதுகேட்டு அவ்வரசன்

அதிசயிக்க, அங்குவந்திருந்த மதுரைத்தமிழாசிரியராகிய சாத்தனர், மதுரையிற் கோவலன் கொலையுண்டதையும் அங்கே கண்ணகியால் நடந்தவற்றையும் மதுராகர்த்தெய்வம் அவளுக்குமுன்வந்து சொல்லியதையும் விரித்துச்சொன்னார் ; செங்குட்டுவன், பாண்டியன் இறந்ததற்கிரங்கித் தன்தேவியின் வேண்டுகோளால் கண்ணகியாகிய பத்தினிக்கடவுளைப் பிரதிஷ்டித்து வழிபடுதற்கென்ணி, அவளுருவஞ்செய்தற்குச் சிலைகொணர்தற்பொருட்டு மந்திரிகளோடும் ஆலோசித்து, முன்னம் இமயமலையின்றும்வந்த முனிவர்கள் 'ஆரியமன்னராகிய கனகனும் விசயனும் தமிழ்நாட்டரசனையிகழ்ந்தார்' எனறு சொலலைக்கேட்டவுடனே, அம்மன்னர்களைவென்று அவர்கள் முடியில் அசசிலையையேற்றிக் கொண்டுவருவேனென்று சபதம்செய்து, உடனே சேனைகளுடன் புறப்பட்டு நீலகிரியையடைந்து அங்குத்தங்கி இமயமலையின்றும்வந்த முனிவர்கள்கூறிய ஆச்சையைப்பெற்று அப்பாற்சென்று கங்காநதியைப்படைத்து தனது எட்டமைச்சர்களாகிய கன்னர்களை கொணர்ந்து வைத்திருந்த ஓடமேறி அக்கரைசென்று அவ்விடத்திற்றங்கி அங்கே போர்செய்தற்குவந்த கனகவிசயரையும் அவருக்குத்துணையாகவந்த உத்தரன் முதலிய அமைச்சர்களையும்வென்று தாபதவேடமுதலியவற்றைக் கொண்டோடிய அவ்வமைச்சர்களைப்பிடித்து அகப்படுத்திக்கொண்டு தன்மந்திரியாகிய வில்லவன்கோதையையும் சேனையையும் அனுப்பி இமயமலையின்றும் சிலவருவிந்து அதைக் கனகவிசயர்முடியிலேற்றி விதிப்படி கங்கையில் நீர்ப்படைசெய்து இப்பாலவந்து அதன்தென்கரையிற் சேனையோடுந்தங்கி அங்குக் கங்கையாடிவந்த மாடலமறைக்கோவலன் வரலாறுமுதலியவற்றையும் நெடுஞ்செழியனுக்குப்பின்பு இளங்கோவேந்தன் அரசாட்சிசெய்துவருதலையுமறிந்து அம்மாடலனுக்குத் தன் நிறையாகிய ஐயபதுலாம்பொன் தானஞ்செய்து தன்னாலெல்லைப்பட்ட கனகவிசயரைச் சோழனுக்கும் பாண்டியனுக்கும் காட்டிவரும்படி நீலன்முதலிய ஏற்றர்களையனுப்பிவிட்டுச் சேனையுடனேபுறப்பட்டு இடையிலுள்ளவளங்களையெல்லாம் பார்த்துக்கொண்டுவந்து சகாயமலைசேர்ந்து ஆங்குள்ளவர்களோடும் அளவளாவி மகிழ்வுற்றிருந்தான் ; அப்படியிருக்கையில் ஒருநாள், அனுப்பப்பட்ட நீலன்முதலிய ஏற்றர்கள் வந்து, 'தேவியைவிடைகொண்டு மாறுவேடம்பூண்டுசென்ற கனகவிசயர்முதலியோரைப்பிடித்துக்கொண்டுவந்ததைச சோழனும் பாண்டியனும் இகழ்ந்துசொன்னார்கள்' என்று சொல்லக்கேட்டு மிகுந்தகோபங்கொண்டு, அங்குவந்திருந்த மாடலன் 'நீ கோபந்தணிக ; இளமை யாக்கை செல்வமுதலியவைகள் நிலையா ; நல்லபதத்தையடைவிக்கும் யாகத்தை இனிச்செய்தல்வேண்டும்' என்று பல ஏதுக்கள்முகமாக எடுத்துச்சொல்லக்கேட்டு அக்கோபந்தணிந்து, அம்மாடலன் சொல்லியவண்ணம் யாகத்திற்குரியவற்றை அமைக்கும்படி சிலையனுப்பி, ஆரியவரசர் முதலியோரைச் சிறையினின்று நீக்கி அவர்களுக்குவேண்டியவற்றைக்கொடுத்து உபசரிக்கும்படி வில்லவன் கோதைக்குச்சொல்லிப் பலருடன்சென்று, சிறந்த கம்பியர்களாற்செய்யப்பட்ட ஓரிலையத்தில் இமயச்சிலையாலியற்றப்பட்டுள்ள வடிவத்திற் பத்தி

னிக்கடவுளாகிய கண்ணகியைப் பிரதிஷ்டைபண்ணி வீதிப்படி நித்திய பூசைமுதலியவற்றை நடத்தும்படி கட்டளையிட்டு அங்கேயிருந்தான். அப்படியிருக்கும்பொழுது, முன்னம், கோவலன் கொலையுண்டதுமுதலியவற்றை மாடலனிற்கேட்ட தேவந்தியும் கண்ணகியின் செவிலித்தாயும் அவளழித்தோழியும் காவிரிப்பூம்பட்டினத்தினின்று நீங்கி மதுரையையடைந்து அங்கே கண்ணகியைக்காணுமல் மாதரிமகள் ஐயையைக்கண்டு அவளையழைத்துக்கொண்டு வையைக்கரைவழியேசென்று மலைநாடுபுகுந்து கண்ணகிகோயிலையடைந்து அங்கிருந்த செங்குட்டுவனைக்கண்டு தங்களின் இன்றுரென்று அறிவித்துக் கண்ணகியின் பிரிவாற்றுமையால் வருந்திப் புலம்பினர்கள்; அப்பொழுது கவனகி தெய்வவடிவத்தோடு வெளிப்படுத்செங்குட்டுவனுக்குக் காட்சிகொடுத்து வாழ்த்தினாள்; பின்பு செங்குட்டுவன் மாதவிமகளாகியமணிமேகலையின் துறவைவத் தேவந்திசொல்லக்கேட்டு, அவள்மேல் ஆவேசித்த சாத்தனென்னுந்தெய்வத்தின் கட்டளையால் மாடலன் தன்கையிலுள்ள கமண்டலநீரை அங்குவந்திருந்த மூன்று இளம்பெண்கள்மீது தெளிப்ப உடனே கண்ணகியைக்குறித்துப்புலம்பிய அம்மூவரையும் கண்ணகிநற்றாய் கோவலன்நற்றாய் மாதரி எனவும் இம்மூவருடைய பிறப்பினராக அறிந்து, அவர்கள் அவ்வாறுபிறத்தலுக்குக் காரணத்தை மாடலன்சொல்லக்கேட்டுப் பத்தினிக்கடவுளுக்கு நித்தியபூசைசெய்யும்படி தேவந்திக்குச்சொல்லித் தான் அக்கடவுளை மூன்றுமுறை வலம்வந்து வணங்கி நின்றான்; அப்பொழுது ஆரியமன்னரும் மாளுவவேந்தரும் இலங்காபுரத்தரசனுகிய கயவாகுவும் அங்குவந்து அக்கடவுளைநோக்கி 'இச்செங்குட்டுவனைப்போல எங்களுடையநாட்டில் யாங்கள உனக்குசெய்யும் பூசையில் நீ எழுந்தருளி எங்களுக்கு அருள்செய்யவேண்டும்' என்றுபிரார்த்திப்ப, நீங்கள்விரும்பியபடியே வரந்தந்தேனென்று அசரீரியால் உண்டாயிற்று. அதனைக்கேட்ட செங்குட்டுவனும் பற்றையரசர்களும் மிகுந்த சந்தோஷமடைந்தார்கள். பின்பு செங்குட்டுவன மாடலனோடு யாகசாலைக்குச் சென்றான். அப்பால், இளங்கோவடிகள் பத்தினிக்கடவுள் கோயிலுக்குச் சென்றார: அவருக்குமுன்பு பத்தினிக்கடவுள் தேவந்திவடிவுடனே அவருடைய வரலாறுகளைச் சொல்லி உவப்பித்தாள்.

கோவலன் வெட்டுண்டுவிழுந்தகாலந் தொடங்கிப் பாண்டியநாட்டில் மழை இல்லாதுபோயிற்று; வறுமையும் நோயும் அதிகரித்தன; அதுகேள்வியுற்று கோற்கைநகரத்திருந்த அரசனுகிய இளஞ்செழியன் பத்தினிக்கடவுளுக்கு ஆயிரம் பொற்கொல்லரைப் பலியிட்டுக் களவேள்வியாற்சாந்துசெய்து விழாவெடுத்தலால், அந்நாட்டில் மிகவும் மழைபெய்தது; முற்கூறிய வறுமையும் நோயும் நீங்கின. அதனைக்கேள்வியுற்றுக் கொய்குழல்மடந்தையரசரும், இலங்காபுரத்தரசனுகிய கயவாகுவும், சோழநாட்டில் உறையூரிலிருந்த அரசனுகிய பெருநற்கிள்ளியும் கண்ணகிக்குக் கோயில்கட்டுவித்து நித்தியபூசை விழாமுதலியவற்றைச்செய்து வழிபட அவர்நாடுகள் மிகுந்த வளமுற்றன.

பத்தாவது

நாடுகாண்காதை.

வான்கண் விழியா னைவகை மறையா மத்து
மீன்றிகழ் விசும்பின் வெண்மதி நீங்கக்
காரிரு ணின்ற கடைநாட் கங்கு
லாழ்விசை கடைஇ யுள்ளம் துரப்ப
வேழகத் தகருந் மெதினக் கவரியுந்
தூமயி ரன்ன முருந் துணையெனத் திரியுந்
தாழொரு குயின்ற தனிசால் சிறப்பி
னீணெறி வாயி னெறிந்துகடை கழிந்தாங்
கணிகிள ரரவி னெறிதுயி லமர்ந்த
மணிவண்ணன் சோட்டம் வலஞ்செயாக் கழிந்து
பூணையுந் தோங்கிய பாசிலைப் போதி
யணிதிகழ் நீழ லறவோன் றிருமொழி
யந்தர சாரிக ணைறந்தனர் சாற்று
மிந்திர விகார மேமுடன் போகிப்
புலவுண் டுறந்து பொய்யா விரதத்
தலைநீத் துறைந் தடக்கிய கொள்கை
மெய்வகை யுணர்ந்த விழுமியோர் குழீஇய
வைவகை நின்ற வருகத் தானத்துச்
சந்தி யையந்துந் தம்முடன் கூடி
வந்து தலைமயங்கிய வான்பெரு மன்றத்துப்
பொலம்பூம் பிண்டி நலங்கினர் கொழுநிழ
னீணணி விழுவிணை யொருங்கேற் விழுவிணை ஞ

சாரணர் வருஉந் தகுதியுண் டாமென
வுலக நோன்பிக ளொருங்குட னிட்ட
உரு விலகொளிச் சிலாதலந் தொழுது வலங்கொண் டு
மலைதலைக் கொண்ட பேர்யாறு போலு
முலக விடைகழி யொருங்குட னீங்கிக்
கூலயி லாளன் காமர் வேனிலொடு
மலைய மாருத மன்னவற் கிறுக்கும்
கூ0 பன்மல ரடுக்கிய நன்மரப் பந்த
ரிலவந் திகையி னெயிற்புறம் போகித்
தாழ்பொழி லுதித்த தண்பதப் பெருவழிக்
காவிரி வாயிற் கடைமுகங் கழிந்து
குடதிசைக் கொண்டு கொழும்புனற் காவிரி
கூரு வடபெருங் கோட்டு மலாப்பொழி னுணைழந்து
காலதங் கடந்து கவுந்திப் பள்ளிப்
பூமரப் பொதும்பர்ப் பொருந்தி யாங்க
ணீறுங்கொடி நுசுப்பொ டிசைந்தடி வருந்தி
நறும்பல் கூந்தல் குறும்பல வுயிர்த்து
சுo நிராக் கிளவியின் முள்ளெயி றிலங்க
மதுரை மூதூர் யாதனை வினவ
வாணறுங் காதகம் மகளுட் டும்பர்
நாணறுங் கூந்த னணிதென நக்குத்
தேமொழி தன்னொடுந் சினையக தநிருந்த
சுரு காவுந்து யையையையக் கண்டடி தொழுது
மூருவுங் குலனு முயர்பே மொழுக்கமும
பெருமகன் றிருமொழி பிறழா நோன்பு
முடையீ ரென்னே வுறுக ணுளரிற்
கடைகழிந் திங்ஙனங் கருதிய வாறென
ருo வுரையாட் டில்லை யுறுதவத் தீர்யான்
மதுரை மூதூர் வரைபொருள் வேட்கையென்
பாடகச் சீறடி பரற்பனை யுழவா
காடிடை யிட்ட நாடுநீர் கழிதற்
கரிதிவள் செவ்வி யறிகுநர் யாரோ
ருரு வுரிய தன்றீங் கொழிகென வொழியீர்
மறவுரை நீத்த மாசறு கேள்வியர்

றாவுரை கேட்டாங் கறிவனை யேத்தத்
தென்றமிழ் நன்னாட்டுத் தீதுதீர் மதுரைக்
கொன்றிய வுள்ள முடையே ணகலிற்
போதுவல் யாணரும் போதுமி னென்ற
காவந்தி யையையையக் கைதொழு தேத்தி
யடிகணீ ரருளுதி ராயினித்
தொடிவளைத் தோளி துயர்தீர்த் தேனெனக்
கோவலன் காணைய் கொண்ட விந்நெறிக்
சதந் தருவன யாங்கும்பல கேண்மோ
வெயினிறம் பொருஉ மெல்லியற் கொண்டு
யில்பூந் தண்டலைப் படர்குவ மெனினை
மண்பக வீழ்ந்த கிழங்ககழ் குழியைச்
சண்பக நிறைத்த தாதுசேர் பொங்கர்
பொய்யறைப் படுத்துப் போற்ற மாக்கட்குக்
கையறு துன்பங் காட்டிணங் காட்டு
முதிர்பூந் செம்மலி னெதுங்கினர் கழிவோர்
முதிர்தேம் பழம்பனை முட்டிணு முட்டு
மந்தளரு மிந்சியு மயங்கரில் வலயத்துச்
செஞ்சுளைப் பலவின் பறம்பகை புறுக்குங்
கயனெடுங் கண்ணி காதற் கேள்வ
வயலுழைப் படர்குவ மெனினை யாங்குப்
பூநா றிலஞ்சிப் பொருகய லோட்டி
நீர்நாய் கௌவிய நெடும்புற வாளை
மலங்குமி ளிர்செறுவின் விலங்கப் பாயிற்
கலங்கலு முண்டிக் காரிகை யாங்கட்
கருங்கிற் நெடுத்த பெருந்தேன் சிதைந்து
சுரும்புசூழ் பொய்கைத் தூநீர் கலக்கு
மடங்கா வேட்கையி னறிவரு நெய்திக்
குடங்கையி னெண்டு கொள்ளவுங் கூடுங்
குறுகரிட்ட குவளையம் போதெதாடு
பொறிவரி வண்டினம் பொருந்திய கிடக்கை
நெறிசெல் வருத்தத்து நீரரு நெய்தி
யறியா தடியாங் கிடுதலுங் கூடு
மெறிநீ ரடைகரை யியக்கந் தன்னிற்

பொறிமர் ணலவணு நந்தும் போற்ற
தூழுடி யொதுக்கத் துறுநோய் காணிற்
றுழ்தரு துன்பந் தூங்கவு மொண்ணு
வயலுஞ் சாலியு மல்லதி யாங்கணு
மயல்படக் கிடந்த நெறியாங் கில்லை
நெறியிருங் குஞ்சி நீவெய் யோளொடு
குறியறிந் தணையணவ குறுகா தேகாம்பெனத்
தேமறு *கடிணையுஞ் சுவன்மே லுறுணையுங்
காவுந்தி யணையணைகப் பீலியுங் கொண்டு
மொழிப்பொருட் டெய்வம் வழித்துணை யாகனைப்
பழிப்பருஞ் சிறப்பின் வழிப்படர் புரிந்தோர்
கரியவன் புகையினும் புகைக்கொடி தேன்றினும்
விரிகதிர் வெள்ளி தென்புலம் படரினுங்
கால்பொரு கிவப்பிற கடுங்கூர் வேற்றெறி
சூன்முதிர் கொண்மூப் பெயல்வளர்ந் தபபத்
தூடமலைப் பிறந்த கொழும்பஃ றூரமொடு
கடல்வள னெதிரக் கயவாய் மொரிக்குங்
காவிரிப் புதுநீர்க் கடுவரல் வாய்த்தலை
யோவிறந் தொலிக்கு மொலிபே யல்ல
தாம்பியுங் கிழாரும் வீங்கிணை யேத்தும்
மோங்குநீர்ப் பிழாவு மொலித்தல் செல்லாக்
கழனிச் செங்கதிர் கரும்புகுழ் மருங்கிற்
பழன்த் தாமரைப் பைம்பூங் கானத்துக்
கம்புட் கோழியுங் கணைகூர் ணுளையுஞ்
செங்கா லன்னமும் பைங்காற் கொக்குங்
கானக் கோழியு நீர்நிறக் காக்கையு
முளரு முரலும் புளரும் புதாவும்
வெல்போர் வேந்தர் முனையிடம் போலப்
பல்வேறு குழுவுக்குரல் பாந்த வோசையு
முழுவுறு நுண்டொளி யுள்புக் கழுந்திய
கழுமமயிர் யாக்கைச் செங்கட் காரான்
சொரிபுற முரிஞ்சப் புரிவளுகிழ் புற்ற
குமரிக் கூட்டிறம் கொழும்பல் லுணவு

---

*கடிணைகையெனவும் பாடம்.

கவரிச் செந்நெற் காய்த்தலைச் சொரியக்
கருங்கை வினைஞருங் களமருங் கூடி
யொருங்குநின் றார்க்கு மொலியே யன்றியுங்
கடிமலர் கலைந்து முடிநா றழுத்தித்
தொடிவளைத் தோளரு மாகமுந் தோய்ந்து
சேறுடு கோலமொடு வீறுபெறத் தோன்றிச்
சங்கய னெடுங்கட் சின்மொழிக் கடைசியர்
வெங்கட் டொலைச்சிய விருந்திற் பாணியுங்
கொழுங்கொடி யறுகையுங் குவளையுங் கலந்து
விளங்குகதிர்த் தொடுத்த விரியல் கூட்டிப்
பாருடைப் பனர்போற் பழிச்சினர் கைதொழு
வெரோடு நின்றோர் சேர்மங் கலமு
மரிந்துசால் குவித்தோ ரரிகடா வுறுத்த
பெருஞ்செந் நெல்லின் முகவைப் பாட்டுந்
தெண்கிணைப் பொருநர் செருக்குட னெடுத்த
மண்கனை முழவின் மகிழிசை யோதையும்
பேரியாற் றடைகரை நீரிற் கேட்டாங்
கார்வ மெஞ்சமோ டவலங் கொள்ளா
ருழைப்புலிக் கொடித்தே ரரவோன் கொற்றமொடு
மழைக்கரு வுயிர்க்கு மழற்றிக ழுட்டின்
மறையோ ராக்கிய * வாவுதி நறும்புகை
யிறையுயர் மாட மெங்கணும் போர்த்து
மஞ்சுசூழ் மலையின் மாணத் தோன்று
மங்கல மறையோ ரிருக்கை யன்றியும்
பரப்புநீர்க் காவிரிப் பாவைதன் புதல்வ
ரிரப்போர் சுற்றமும் புரப்போர் கொற்றமு
முழவிடை விளைப்போர் பழவிற லூர்களும்
பொங்கழி யாலைப் புகையொடு பாய்ந்து
மங்குல்வா னத்து மலையிற் றோன்று
மூரிடை யிட்ட நாடுடன் கண்டு
காவத மல்லது கடவா ராகிப்
பன்னெட் டங்கிச் சென்ற வொருநா
ளாற்றுவீ யரங்கத்து வீற்றுவே றுகிக்

---

* வானவிறும்புகையென்றும், வானவருணவெனவென்றும் பாடம்.

ஞற்று வழிப்பட்டோ ராவென வினவலின்
உஉ௫ மக்கள் காணீர் மானிடப் யாக்கைய்
பக்க நீங்கு மின்பம் பரிபுலம் பினரென
வுடன்வயிற் றேர்க ளொருங்குடன் வாழ்க்கை
கடவது முண்டோ கற்றறிந் தீரெனத்
தீமொழி கேட்டுச் செவியகம் புழைத்துக்
உஉ0 காதலன் முன்னர்க் கண்ணகி நடுங்க
வெள்ளூசுர் போலுமிவ ரென்பூங் கோதையு
முள்ளூசுடைக் காட்டிடை முதுகரி யாகென
கவுந்தி யிட்ட தவத்தரு சாபங்
கட்டிய காதலிற் பட்டதை யறியார்
உஉ௬ குறுகரி வருங்குரற் கூவினி கேட்டு
நறுமலர்க் கோதையு நம்பியு நடுங்கி
நெறியிற் நீங்கியார் நீலை கூறிழு
மறியா மையென் முறியல் வெண்டுர்
செய்தவத் தீர்நும் திருமுன் பிழைத்தேர்க
உசo குய்திக் கால முணையீ ரோவென
வறியா மையினின் றிழிபிறப் புற்றோ
ருணையூர் வொச்சி யொருபுடை யொதுங்கிப்
பன்னிரு மதியம் படர்கூர யுழந்தபின்
முன்னுன யுருவம் பெறுகவீங் கிவரெனச்
உசந சாபவிடை செய்து தவப்பெருஞ் சிறப்பிற்
காவுந்தி யையையுந் தேவியுங் கணவனு
முறுந்செவி வாரண முன்சம முருக்கிய
புறஞ்சிறை வாரணம் புக்கனர் புரிந்தென.

சிலப்பதிகாரமென்பது, சிலம்பினது அதிகரித்தலையுடையது எனவும் மொழித்தொகையாய் நூலுக்குக் காரணப்பெயராயிற்று. அதிகாரம் - அதிகரித்தல். இராசகீதியிற்பிழைத்த அரசனை அறக்கடவுள் கூற்றாய் நின்று கொல்லுமென்பதும், பத்தினியை மக்களோடன்றித் தேவருமுனிவரும் ஏத்துதல் இயல்பென்பதும், முன்செய்த இருவினையும் செய்தபுறமே செய்தோ ஊனாடிவந்து பயனூட்டுமென்பதும் ஆகிய இம்மூன்றும் நிலம் புகாரணமாகத்தோன்றலின், நூலாசிரியராகிய இளங்கோவடிகள், இந் நூற்குச் சிலப்பதிகாரமென்றுபெயரிட்டனர்; இதனை, (பதிகம், அடி - நுந-சுo) "அரசியல் பிழைத்தோர்க் கூறங்கூற றுவது, முரைசால் பத்தினிக்கு யர்ந்தோ ரேத்தலு, மூழ்வினை யுருத்துவந் தூட்டு மென்பதூஉ, நூழ்

வினைச் சிலம்பு காரண மாகச், சிலப்பதி காரமென்னும் பெயரா, லுரட்டு நும் யாமோர் பாடுடைச் செய்யுள்" எனபதனு லுணர்க. சிலம்புகாரண மாக இம்மூன்றுள்ளதான்றுதல், கணக்கருக்கத்தால் உணரப்படும்.

1 | நாடுகாண்காடம். புகார்-காவிரிப்பூம்பட்டினம்; காண்டம் - கூட்டம். எனவே, புகாரில் நடந்த சரித்திரத்தின் கூட்டத்தையுடையதென்பது திரண்டபொருள்.

நாடுகாண்காதை. இது, (கண்ணகியும் கோவலனும்) சோழநாட்டின் வளத்தைக் கண்டகாதை எனவிரியும். காதை - கதையையுடையது. இவர் கள் இங்ஙனம் நாட்டைக்கண்டது, சிலம்பைவிற்று வியாபாரஞ்செய்து பொ ருள்தேடும்பொருட்டுக் காவிரிப்பூம்பட்டினத்தினின்றும் மதுரைக்குப்புறப் பட்டுப்போகும்பொழுதாம். அதற்க.

க - ங. வானங்கண் விரிந்தயா ஈைகணை யாமத்து
மீன்றிகழ் விசும்பின் வெண்ணிலா திரீங்கக்
காரிரு ளகன்ற கைடகாட் கங்குல்

இதனாற் சொல்லியது, உலகிற்குக் கண்ணெனப்படுவதாகிய ஞாயிற்றின் காதலையுடைய மாலையென்னும் யாமத்திடத்து மீமிசை அழகுபெற்றெழுகும் வெண்மதியானது விசும்பினின்றும் நீங்கிற்றாகக் கரிய இருள் கடைக்கண் வினை கங்குற் பொழுதிலென்க.

என்பது: அந்தச் சித்திரைத்திங்கட் புகுதிநாள்-சோதி, திதி-மூன்றும் பக்கம், வாரம்-ஞாயிறு; இத்திங்களிருபத்தெட்டிற் சித்திரையும் பூரணையுங் கூடிய சனிவாரத்திற கொடியேற்றி *"ஈரேழ் நாளினும்" என்பதனன் இருபத்தெட்டுநாளும் விழாநடாத்தி யெகாடியிறங்கி யைகாசி இருபத்தெட்டி னிற பூருவபக்கத்தின் பதினாலுன்றும் பக்கமும் சோமவாரமும்பெற்ற அனு டத்தில் ரட்கடலாடி வானுதலின் மைகாசி இருபத்தொன்பதிற் செவ்வாய் க்கிழமையும் கேட்டையும் பெற்ற நாசியாகத்து நிறைபதிப் பதினாலாம் பக்கத்து மைகணிறப்பொழுதினிடத்து நிலவுபட்ட அந்தாத்திருளிலே யென் றவாறு. அது பூருவபக்கமென்பதை தோன்றக் காரிருணின்ற கைடகாட் கங் குலென்றார்; †"குணமுதற் றோன்றிய வாரிருண் மதியிற், றோய்வன கெ டுகநின் றெவ்வராக்கம்" என இருண்மதியென்றார் மதுரைக்காஞ்சியுள்ளும்.

கண் - இறைவன்கண்ணெனன்பாருமுளர். விழித்தல் - விளங்குதல்; அது

---

* மணிமேகலை, முதலாவது விழாவறைகாதை: "தூங்கெயி லெறிந்த தொழுத்தோட் செம்மியன், விண்ணவர் தலைவனை வணங்கிழுன் னின்று, மன்னவகத் தென்றன் வாம்படி தன்னுண்ண, மேலோர் விழைய விழாக்கோ ளெடுத்த, நாலேழ்நாளினு நன்கினி துறைகென, யமரர் தலைவ னுரைத்தது"

† பத்துப்பாட்டு, மதுரைக்காஞ்சி, ககருந - ககசு.

செய்யாதவைகறை - ஆகுபெயர் ; வைகல் - தங்கல் ; ஆசான் - அறையப்பட்டது ; "பொறியறை" போல.

(* குறிப்பு.) † [காரிருள் நின்ற கடை நாள் - காரிருள் கடையிலே நின்ற நாள் ; ஆவது, பூருவபக்கம்.] ஆதித்தன - சூரியன் ; அவன் உலகிற்குக் கண்ணாதலை 'ஜகச்சக்ஷு' என்னும் அவன் வடமொழிப் பெயராலும் உணர்க. வான் என்றது -மேலுலகத்தைத் குறியாமல், இங்கே, உலகமென்னுமை மாத்திரையாய நின்றது. வானத்திலை விளங்குமை (உலகின்) கண் எனவுமாம். "கண்ணிற் சிறந்த வுறுப்பில்லை" ஆதலால், (உலகத்தின்) சிறந்த கண் என்றுமாம. வைகறை - பொழுது விடிதற்கு முந்திய பத்துநாழிகைக்காலம் ; இது - சிறுபொழுது ஆறனுள் ஒன்று : அவை மாலை, யாமம், வைகறை, விடியல், நண்பகல், எற்பாடு எனப்படுவன ; இவற்றிற்கு வரையறை, சூரியோதயமான காலம் முதல் ஒவ்வொன்று பப்பத்நாழிகையாக முறையே கொள்க. "வைகறைபாயம்பு யிலெழுந்து" எனவாசக்கோவையிலும் காண்க. "வைகறைத்துயிலெழ," "விடியல்வைகறையிடையாம்" எனபனவையும் அறிக. பிரம் - ராக்ஷதத்தன ; விளங்குவதுபற்றி வந்த பெயர். மதி - சந்திரன். கடைக்கண்-முடிவிலை. கங்குல் - இராத்திரி. "நாலேழ்நாழிகையும்" என்னும் மேதகோதரத்-இரு பத்தெட்டு நாட்களிலும் என்று பொருள். பிறை - இந்து உற்சவம். 'அந்தச் சித்திரைத்திங்கட் புகுதிநாள் - சோதி' —அவ்வாருவதத்தில் சித்திரை மாசம் பிரவேசித்த ராக்ஷதத்தினம், ஸ்வாதி. பூர்வபக்கம் - திருதியை ; இது - கிருஷ்ணபக்ஷத்தது. அம்மாதத்தின் பூதநவமியதி ரோகிணிற்றக்கிழமையுந்திருதியையுமாகவே, இருபத்தெட்டாங்கதியதி சனிக்கிழமையும்பூர்வினிமையுமாம். அம்மாசப் பிரவேசம் சுவாதிவியனை ரூறி இரண்டாந்தடவை நாளிற் சித்திரராக்ஷதத்தினமென்றதனால், ராக்ஷதத்தினத்தில் பூர்வபக்கம் விருத்தியிலுற் கூடிவந்ததென்க. வைகாசிமாதத்தில் இரண்டு பௌர்ணமியிலை விருத்தியென அறிக. எனவே, காலவளவையறை வேறாருக்குமாறு காண்க இன்னும் இதனால், அவ்வாருவதத்தில் சித்திரைமாசத்தில் பௌர்ணமியன்றும், வைகாசிமாதத்தினை பூர்வபக்கம் பங்குனியாகவும் கிருஷ்ணதிருதியையுங்கூடின அருடமென்றும் உணர்க. பூர்வபக்கம் - வளர்பிறைக்காலம் ; சுக்கிலபக்ஷம். பதினாறன்பூர்வபக்கம் - திரயோதசி. நாட்கடலாடி - சமுத்திரத்தில் உற்சவாந்தத்தில் அவபிருதஸ்நானஞ் செய்து. ஊடலின் - கோவலன் தனது காதற்பரத்தையாகிய மாதவியுடனே பின்னங்கு வெறுப்புற்றதனால். செவ்வாய்க்கிழமையும் கேட்டைநக்ஷத்திரமுங் கூடினால், அசுபகரமான உற்பாதயோகமாம். நிறைமதிப்பதினாலாம்பக்

---

*குறிப்பென்ற தலைப்பையுடையவைகள் மட்டுமே நூதனமாக எழுதப்பட்டவை.

†[ ] இவ்விருதலைப்பகரத்தினுட்பட்டவற்றைச் சிலப்பதிகாரத்தின் பழைய உரையாசிரியர் அரும்பதவுரையெனக் கொள்க.

கம் - பெளர்ணமிக்கு முந்தின நாள்; சுக்லசதுர்த்தசி. நிலவுபட்ட - நிலாச்சாய்ந்துபோன. "குணமுதல்" என்னும் மேறகோளுக்கு, குணமுதல் தோன்றிய ஆர் இரு நாள் மதியின் நின் றெதவ்வர் ஆக்கம் தேய்வனை கெடுக என்று அங்ஙனம்; கிழக்கிணைசக்கண் தோன்றிய நிறைந்த இருநீளத்தரும் மதி [பூர்ணசந்திரன்] நாள்தோறுந் தேயுமாறுபோல நின்பகைவருடைய ஆக்கம் நாள்தோறுமே தேய்வனவாய்க் கெடுவனவாக எனறு பொருள். சூரியனை 'இறவுண்கண்ண' என்பது, அவன் பரமகுவனெது திரிதேந்திரத்தூர் யலக்கண்ணினை அது கொருபமாதலால்; சந்திரனை இடக்கண்ணும், அக்கினி வெறறிக்கண்ணுமாக இறவுணுக்குக் கண்மூன்றும் முச்சுடர் எனவறிக. வைகறை - தூக்கமொழிதலையுடையது; தொழிலாகுபெயர். "பொறியறை" எனபதற்கு - அறிவு ஒழுந்தலையுடையவன் எனறுவது, திருமகள் நீங்குதலையுடையது எனறுமது பொருள். 'அது கருதல் வைகிய [=கழிந்த] அறுதியாதலின் சோக்கி வைகறை பெளவுங் கூறிப' என்றார், பொருளதிகாரவுரையில் ஆசிரியர் உச்சுறுக்கினிபர்; [அகத்திணையியல்-நாம் சூத்திரம்.]

சூ. வளர்பிறை கடை இருள்நாள் திதிபட

இ - ள். வளர்பிறையாகிய தகரும் எகினமாகிய கரியும் தாய மயிரினையுடைய அன்னமுமாகிய வினை ஒனைறொடொன்று இனமல்லவாயினும் இனம் போலே விடாதுதிரியும் தாழாதிகூடப் பண்ணப்பட்ட பெருமைபொருந்திய சிறபினையுடைய பிகையும் பெரிய கதவையுடைய இடைகழியைக் கழிந்தனைக.

பெருவாயிற்கடை - பெரிய கதவையுடைய தலைக்கடை. தகர்முதலியன இவர் யாராத்தனவாகயின், இவரைத் தம்மினமென்றுகருதித் திரியுமெனையுமாம். வாயிறகவணமுதினவற்றை இனமெனக்கருதித் திரியுமெனையுமைமையும். தாழாதிகுயின்றமையன்றார், போர்க்கதவாகயின் இனியினகாயுற பண்ணுதின்உம்போதே கூடப்பண்ணுதலால். எழுகத்தகர்முதலியன-

இருபெயரொட்டுப் பண்புத்தொகை. வாயில் - கதவு. கடைகழிந்தஞ் ஞர், மனையின்பெருமையும் காவன்மிகுதியுந்தோன்ற. இனி இவனை அனறு கழிந்தானெனினுமமையும்.

(கு - பு.) [ஏழகத்தகர் - மேழகம். எகினமாகியகவரி. சூளனெனத் திரிதருமென்றதூ - இவை ஒன்றோடொன்று இனமலைவாயினும் பழக்கத் துத்திரியும் *(அ) வாயில். தாழொடுகுயினற தலைகசால் சிறப்பெனவே, தாழ் முதலான உறுப்பெல்லாம் அடங்கிற்று. வாயில் என்றது - ஆகுபெ றால், கதவை. தாழொடுகுயிற்றுதல் - போர்க்கதவு பன்னுமபோதே தாழோடே பன்னுமென்றது. வாயினெடுங்கடையாவது - முதலான தோ ரணவாயில்.] ஏழகமாகிய தகர் - ஆட்டுக்கடா. எகினமாகிய கவரி - சவ ரிமான். தூய - சுத்தமான. தாழ - கதவுறு தாள். தலைக்கடை - முதல்வா யில், பிரதானவாயில். முதலுணர: தகர முதலியன ஒன்றைமற்யாவற்று விடாமல் திரிவதற்குக்காரணம், தூரிடத்தில் வளர்ந்ததலால் உண்டாள ஒற்றுமை. எழுதின - சித்திரத்திலுள்ள ஆடு முதலியன.

அ - கo. ஆகு

அணிகிள ரரவி னறிதுயி லமர்ந்த
மணிவண்ணனை கோட்டம் வலஞ்செயாக் கழிந்து

இ - ள். அங்ஙனம் வாயில்கடந்தபினபுதே அரவணையின்மீதே சூழ வேறு துயிலைகொள்ளுஞ் மணிவண்ணனென்னும் திருமாமத்தை துயிலைடைய திருமால்கோயிலை வலஞ்செய்து கழிந்ததனை.

ஆவது வலத்திடைடேகுதல். அணி - அழகு. அறிதுயில் - போகந்தருவை. மணிவண்ணன்னை - பெயர்.

(கு - பு.) [வலஞ்செயா - வலத்திலேயிட்டு.] அரவணை - ஆதிசேஷ னுகிய சயனம். மணிவண்ணனை என்பதற்கு - நீலமணிபோனை திருமேனியை யுடையனென்று பொருள். கிளர்தல் - நிறைதல்.

கக - கச. பவளையைத் தோய்ந்திய பாகிலப் போது
யணிதிகழ் சீழ லறவோன் றிருவமர்ந்
யந்தர சாரிக ளறைறந்தனர் சாற்று
மிந்திர விகார மேமுடன் போகி

இ - ள். ஓங்கிய பூந்துபவணையினையும் பசிய இலையினையுடையை மா போதிநிழலிலைவீற்றிருந்தருளிய அறவோரூகிய புத்தன் அருளிச்செய்த ஆக மத்தை ஆகாயசாரிகள் மறையாயிருந்தோதி யாவர்க்கும் விளங்கப் பொரு ளுணர்த்தப்படும் இந்திரனிருமிக்கப்பட்ட விகாரங்களோழிந்தனையை அவை வே கண்டு அவற்றைக் கழிந்துபோயென்க.

---

*( ) இக்குறிப்பிடப்பட்ட எண்கள் தந்தை பெயர் முறை சொடக ளுள்ள மூலத்தினை வரிசையைப் புலப்படுத்துவன.

அவை அவ்வூர்ப் புத்தசைத்தியத்து இந்திரன் நிருமித்தனவாகிய ழுறங்கு. மாபோதியைந்துபிணையது.....இயல்பு. திருமொழி-ஆகமம். அறைந்து சாற்றுதல் - பாடமோதிப் பொருளுரைத்தல். விகாரம் - கை பாற் கருவியாற் பண்ணுது மனத்தால் நிருமித்தல்.

(கு - டு.) [போதிக்கு ஐந்துகாம்பாதலால், 'பிணையம்தோங்கிய' என்றார். திருமொழி - தருமம்.] பிணை - கிளை. மாபோதி - சிறந்ததும் பெரியதுமாகிய அசமமம். அறவோன் - தருமசொரூபி. அடைவே - வரிசையாக. புத்தசைத்தியம் - பௌத்தவித்தியாசாலை; புத்தருலையுமாம். அரங்கு - இடம். "மாபோதி" என்பது, இடம் விளங்காமேற்கோள். பாடமோதல் - மூலத்தை விளங்கச சொல்லுதல்.

கஙு - உஙு. புலவுணர் நிறைந்து பொய்பா விரதத்
தவலை நீத்தறிக் தடக்கிய கொள்கை
மெய்வகை யுணர்ந்த விழுமியோர் குழீஇய
வைவகை நின்ற வருகத் தானத்துச்
சந்தி யைந்துந் தம்முடன் கூடி
வந்துதலை மயங்கிய வான்பெரு மன்றத்துப்
பொலம்பூம் பிண்டி நலங்கிளர் கொழுநிழ
னீரணி விழுவிறு மரும்தேர் விழுவினுஞ்
சாரணர் வருஉந் தகுதியுன் டாமென
வுலக மோரன்ன பொருங்குடை னிட்ட
விலக்கனிச் சிலாதலந் தொழுது வலங்கொண்டு

இ) - ள். புலாலாகிய உணவைத்துறந்து பொய்கூறுமையாகிய விரதத்தை நீத்தறிந்து அழுக்காறு அவாவழுதலியவற்றைக் கைவிட்டு அறநூல் முதலியவற்றையறிந்து ஐயடலேனையுமடக்கிய கோட்பாட்டையுடையராய் உலகமெலாமுணர்ந்த சிரிபோர்திரண்ட ஸ்ரீகோயிலில் பஞ்சபரமேட்டி களாகிய பிரிவற்ற ஐச்சுசத்தியுங்கூடி வந்து தலைமயங்கியிருக்கின்ற பிக்க டைய மனறிலே பூவையுடைய அசோகினது அழகுகிளரும் நிழறகண்ணே வடதிசை அயனுதிகளிலும் விழவுகளிலும் ஆகாய சாரிகள் வருதருமென்று சாவகமெல்லாம் கூடியிடப்பட்ட விளாகமாகின்ற ஒளியையுடைய சிலாவட் டத்தை இவர்கள் தொழுது வலங்கொண்டென்க.

புலவுணர் - புலாலோடே உண்ணுமுணர்மம். புலவுண் பாடமாயிற் புலையருண்ணுமென்க. ஐவகை - பஞ்சபரமேட்டிகள்; அவர்: அருகர், புத்தர், உபாத்தியாயர், ஆசிரியர், சாதுக்களெனவிவர்; இனி ஐவகை நின்ற வருகத் தானத்துச் சந்தி.....மன்றென்பதற்கு ஐந்து ஸ்ரீகோயிற் சந்திகூடிய மன்றென்பாருமுளர். பொன்பொலிவாதலின்றிப் பொலம்பொலி வாகாமையின் அருகருவினையான எப்பொழுதும் பொற்பூவைப்பூக்கும் பின் டியென்க. சிலாதலம் - சந்திரகாந்தக்கல்லாற படுத்தது. நீரணிவிழவு - அபிடேகவிழவெனினுமமையும்.

(கு - பு.) [புலியூன் - மச்சமாங்கிசம். (கரு) பொய்யா விரதத்து (கஎ) விழுமியோரென்க. விரதத்தோடே அடங்கிய. ஐவகை நின்ற கோயில்-ஐந்து சந்திக்கும் ஐந்து கோயிலாய் நின்ற கோயில். சந்தியைந்து - ஐந்து சாதி; அவையாவன: பஞ்சபாண்டவர்களர்தரு. இவர்கள்கூடினை மன்று. (உ0) இம்மன்றிற் (உக) பின்னடிநிழலின்மேல (உச) யிட்ட (உரு) சிலாதல மென்க. நீராணி விழவு - திருவபிடேகவிழவு; அயனம், சங்கிரமம்; புதுப்புனலாட்டினவுமாம். தேர் விழவு - திருநாள். உலகநோனாயிகள் - உலகவுயிர்க் கோடு பொருந்தினை நோன்பிகள்; இவர்: இலக்கணத்தையுடைய சாவகர்.] புலால் - மாம்ஸம். ஓவுன்னை - உன்னப்படுவது. அறுத்தல் - நீக்குதல. அவலம் - துன்பந்தருபனவ. அறநூல் - தருமசாஸ்திரம். தலைமயங்குதல - கலத்தல். மனறு - பொதுவிடம். பின்னடி - அசோகமரம். விழவு - உற்சவம். ஐப்பசிமாசப் பிறப்புக்கள். பகலும் இரவும் பொழுதொத்திருக்குங்காலம, வடமொழியில் விஷுவத்தல்லது விஷுவமெனப்படும். அயநங்கள் - தக்ஷிணாயனத் தொடக்கமாகிய ஆடிமாசப்பிறப்பும, உத்தராயணத் தொடக்கமாகிய தைமாசப்பிறப்பும். விழவு - திருவிழா. சிலாவட்டம் - வட்டவடிவமாகிய கல். தொழுது - நமஸ்கரித்து. வலங்கொண்டு-பிரதக்ஷிணஞ் செய்து. முதலியன என்றதனு, வெகுளி இன்னசொற்களும்; "அழுக்காறவா வெகுளியின்னாச்சொன்னன்கு, மிழுக்காவியபன்றதறம்" என்றார், திருக்குறளில். ஆணை - ஸங்கல்பம், கட்டளை. சந்திரகாந்தம் - சந்திரனமுனையில் நீர்காலுங் கல்.

உசு - உள. மலைதலைக்கொண்ட போர்யாறு போலு
முலகவிடைகழி யொருங்குகூட வீங்கி

இ - ள். மலையிடத்தே தலையையுடையதோர் பெரியயாறபோலும உலகிலுள்ளோராயவர் பொக்குவது செய்தறகுரைத்த ஈரவாயிலு மதக்காலத்துப் போவாரோடு கலந்துபோய் அதனைவிட்டுநீங்கியென்க.

உலகவிடைகழி-ஈரவாயில். இடையேகழிதன்னை, அவ்வாயில் இடைகழியாயிற்று. கோயிற்கோபுரத்தை மலையாகவும், அதன்மேல் மண்டபத்தினதருவை ஆறுகவும் உவமித்தார்.

(கு - பு.) [வாயிலுக்கு உவமம் - மலை. தெருவுக்கு உவமம் - யாறு. உலகவிடைகழி - உலகத்தாரெல்லாரும் போகலான ஈரவாயில; தெருவிட்டு ஒழுங்குக்கு இடையே கழிதலாம், இடைகழி.]

உசு - உக. கலையி லானை காமர் வேணிலொடு
மலய மாருத மன்னவற் கிறுக்கும்
பன்மல ரடுக்கிய நன்மரப் பந்த
ரிலவந் திகையி னெயிற்புறம் போகி

இ - ள். மன்னவற்குக் காமன் வேணிலோடு தென்றலையும் நிறையாக இடுதற்குப்பொருந்திய பலமலர்களை நிரைத்த நல்ல மரநிழலையுடைய இலவந்திகையினது எயிறகுப் புறநதிலேபோயென்க.

கலையிலாளன் - அங்கன்; கலை - சரீரம். காமர்-அழகு. டந்தர் - கீழல். இலவந்திகை - நீரால்விளைச்சூழ்ந்த வயற்சசோலை. அஃது அரசனும் உரிமையுமாடுங் காவற்சோலை; * "இலவந் திகையி னெயிற்புறம் போகி, னுலக மன்னவ னுழையோ ராங்குளர்" என்றார் மணிமேகலையிலும்.

(கு - பு.) [கலை - சரீரம்; அன்றிக் கலையிலாளன் என்றது-கலைகளில் நின்றுன் காமன். மன்னவனை - சோழன். இறுக்கும் - இறையிடும். மரப் பந்தர் - சோலை யென்றுமாம். காமனை வேனிற் காலத்தையும் தென்றலை யும் சோழனுக்குத் திறையிடும் பொழிலையுடைய எயில். இலவந்திகை-நீராவி. எயில்-சுற்றுமதில். சோலையையும் பொய்கையையு முடைய எயிலை னுமாம்.] வேனில் - வசந்தம். திறை - அரசிறை. நிரைத்த - ஒழுங்காக நிறுத்திய. இலவந்திகை - யந்திரவாவியுமாம். 'இலவந்திகையின்' என்னும் மேற்கோருக்கு - உத்தியானவனத்தினது மதிலின் வெளியிலே சென்றால் உலகத்தரசனது பக்கத்தோர் அவ்விடத்திலுள்ளார்கள்என்று பொருள்.

நுக - நுடங். தாழ்பொழி லுடுத்த தண்பதப் பெருவழிக்
காவிரி வாயிற் கடைமுகங் கழிந்து

இ - ள். இருபக்கமும் சோலைசூழ்ந்த புகிப்புனலாடப்போம் பெரிய வீதியையுடைய காவிரிக்கரையில் திருமுகத்திறைகழிகின்றவாயிலையும்கழி ந்தென்க.

கடைமுகங்கழிந்ததன்றூர், காலையில் நாணோராடுவோர் பிறர்முகநோக் காது போதற்கு மறைந்துகழிவர்; இவரும் அவ்வாறுகழிந்தாரென்றற்கு.

(கு - பு.) [தண்பதப்பெருவழி - புனலாட்டுக்குப் போம் பெருவழி; திருமஞ்சனப்பெருவழியுமாம்; காவிரிக்கரையிடத்துவாயில்.] காவிரி - காவேரி எனனும் வடசொல்லின் திரிபு; கவேர னென்னும் அரசனது மகளென்பது பொருள்.

நுசு. குடதிசைக் கொண்டு—இ - ள். மேற்றிசையைநோக்கிக் கொண்டு,

(கு - பு.) குடக்கு - மேற்கு.

---

* மணிமேகலை, மூன்றுவது மலர்வனம்புகுகாதை: "பன்மல ரடுக்கிய னன்மாப் பந்த, நிலவந் திகையி னெயிற்புறம் போகி, னுலக மன்னவ னுழை யோ ராங்குளர், விண்ணவர் கோமான் விழாக்கொ ணனனுண், மன்னவர் னிழையார் வானவ ரல்லது, பாடுவண் டுமிரா பன்மர மாவையும், வாடா மாமலர் மாலைக ளீக்கலிற், கைபெய் பாசத்திப் பூதங் காக்குமென், றுய்யா னத்திடை யுணர்ந்தோர் செல்லார், வெங்கதிர் வெம்மையின் விரிசிறை யிழந்த, சம்பாதி யிருந்த சம்பாதிவனமும், தவாநீர்க் காவிரிப் பாவைதன் றுறை, கவேரனுங் கிருந்த கவேர வனமும், மூப்புடை முதுமைய நாக்க ணங் குடைய, யாப்புடைத் தாக வமிர்தோ டெய்தார்."

நூசு - நூநு. கொழும்புனற் காவிரி
வடபெருங் கோட்டு மலர்ப்பொழி னுழைந்து

இ - ள். வளவிய புனலையுடைய காவிரியினது பெரிய வடகரையிற் பொழிலைக்கழிந்தென்க.

கோடு - கரை. நுழைதல் - கழிதல். அன்றி இளமரக்காவாதலால், தாழ்ந்த கோட்டிடை நுழைந்துபோயெனவுமாம்.

(கு - பு.) வளவிய புனல் - அதிகமான நீர். பொழில் - சோலை.

நூசு - சக. காவுதங் கடந்து கவுந்திப் பள்ளிப்
பூமாப் பொதும்பர்ப் பொருந்தி யாங்க
ணிறுங்கொடி நுசுட்போ டிடைனந்தடி வருந்தி
நறும்பல் கூந்தல் குறும்பல வுயிர்த்து
முதிராக் கிளவியின் முள்ளெயி றிலகக
மதுரை மூதூர் யாதெனை வினவ

இ - ள். நறிய ஐவகைக் கூந்தலையுடையாள் அங்ஙனம் காதமென்று சொல்லப்படுமெல்லையைக்கடந்துசென்று கவுந்தியடிகளிருக்கின்ற பள்ளிக்கு அயலதோர் பொலிவினையுடைய செறிந்த இளமரச்சோலையளவுஞ்சென்றுபொருந்தி அவ்விடத்தே இனி இவ்விடந்து இறுமெனத்தக்க கொழுப்போலும் இடையும் அடியும் மிகவும் வருந்தி மேல் இளைப்பாற் குறுகவுயிர்த்து முற்றுதமழலைமொழியாலே கூர்த்த எயிறிலங்க மதுரையென்னுமூதூர் யாதுதானென்று கேட்பவென்க.

காவுதம் - காதம. பொதும்பர் - மரச்செறிவு; கோடரமென்பதுமாம்.

(கு - பு.) [கவுந்தியடிகள் பள்ளியையுடைய சோலை] காதம் - ஏழாநாழிகைவழி. இறும் - ஒழியும். இளங்து வருந்தி - ஒருபொருட் பன்மொழி. உயிர்த்து - பெருச்சுவிட்டு. மூதூர் - பழையவூர். ஐவகைக்கூந்தல் - முடி, கொண்டை, சுருள், குழல், பனிச்சையென்பன ; இயற்றுள், மயிலை உசியில் முடித்தல முடி ; பக்கல் முடித்தல் கொண்டை ; பின்னிவகுத்தல் சுருள்; சுருட்டி முடித்தல் குழல் ; பின்னி விடுதல பனிச்சை.

நூசு - நூக. ஆறைங் காதநம் மகனூட் டுமென்
நாறைங் கூந்த னவின்றனை டக்கு

இ - ள். நீகூறிய மதுரை நம் அகன்றநாட்டிறகுமேல் ஆறைங்காவதங்காண் இனி அணுகியதனறுகூறி நகைத்தென்க.

யாதென்றவட்கு மூப்பதென்னும் பொருள்மறைந்து காதம் ஆறையுங் காத மென்றுற்போலிருத்தற்கு ஆறைங்காதமென்றான். நகுதல் - இன்ப நகை. கூந்தல் - வினி.

(கு - பு.) [ஆறைங்காதம் - மூப்பது காதம் ; ஆறைங்காதமென்றான் - அவட்கு அறுகாதம் ஐங்காதம் என்றுற் போலந் தோன்ற. கூர்த்தல்-பெயர்.

ங்கு - நகைத்து. நகுதல்-சோகத்தாற் பிறந்த விகாரம்.] அகல் நாடு-அகன்றநாடு எனவிரிக்கின்றமையின் விசேடத்தொகையாயிற்று. இன்பத்தால் நகையுண்டாதலின், "எள்ளல் இளமை பேதைமை மடனென், றுள்ளப் பட்ட நகைநான்கென்ப" என்னுஞ் சூத்திரத்து 'உள்ளப்பட்ட' என்பதனைற் கொள்க.

சுசு - சுரு. தேமொழி தன்னெடுஞ் சிறையகத் திருந்த
காவுந் தியையைக் கண்டடி தொழுமென்

இ - ள். அங்ஙனம்வினவின கண்ணகியோடுசென்று தவவேலிக்கணிருந்த காவுந்தியடிகளைக் கண்டு அடிதொழுதலுமென்க.

சிறை - பள்ளியென்றுமாம்; ஸ்ரீகோயிலின் ஒருபக்கமுமாம்.

(அ) கழிந்து (கo) கழிந்து (கச) போகிக் (உரு) கொண்டு(உஎ)தீங்கிப் (ஙக) போகிக் (ஙங) கழிந்து(ஙரு) நுழைந்து(ஙசு)கடந்து(ஙஎ)பொருந்தி (சஙக) நக்குக் (சரு) கண்டு அடிதொழுதலுமென்க.

(கு - பு.) [சிறையகம் - ஸ்ரீகோயில் ஒருபக்கத்தே பள்ளியகம்.] தேமொழி - தேன்போலுஞ் சொற்களையுடைய கண்ணகி; உவமைத்தொகை. தேன்மொழி. தவவேலி - தவமாகிய காவல். ஐயை - தவப்பெண்; இஃது, ஐயன் என்பதன் பெண்பால் போலும். பள்ளி - ஆச்சிரமம். தொழுதலென்னும் வினைக்குக் கோவலன் எழுவாயென அறிக.

சுசு - சுக. உருவுங் குலனு முயர்பே ரொழுக்கமும்
பெருமகன் றிருமொழி பிறழா நோன்பு
முடையீ ரென்னே வுறுக ணுளரிற்
கடைகழிந் திங்ஙனங் கருதிய வாறென

இ - ள். இவர்கள் தொழுதார்களாக, அழகும் குடிப்பிறப்பும் ஒழுக்கமும் இறைவனூலிற்கூறிய விரதந்தப்பாமையுமென்னும் இவற்றையெல்லாம் ஒருதலையாகவுடைய நீங்கள் தீவினையாளரைப்போலே நுமதிடத்தைக் கழிந்துவருவதற்குக் கருதியதென்னெனென்றுகேட்பவென்க.

பெருமகன் - அருகதேவன். திருமொழி - அவனருளிச்செய்த ஆகமம். உறுகணுளர் - மிடியாளரென்பாருமுளர். கடைகழிதல் இவர்க்கு மரபன்மையிற் கழிந்தென்றார். இவ்வும்மைகள் எண்ணுக்குறித்தனவெனினும் சிறப்புப்பொருண்மை தோன்றநின்றன.

(கு - பு.) [உறுகணுளரின் - தின்பமுறும் பாவமுடையார்போல; மிடியாளரைப்போல என்றுமாம். கடை கழிந்து - வாசனைவிட்டு.] ஒருதலையாக - நிச்சயமாக. மிடியாளர் - வறியவர். மரபன்மையின் - முறைமையல்லாமையால்.

ஙo - ஙக. உரையாட் டுல்லி யுறுதவத் தீர்யான்
மதுரை மூதூர் வரைபொருள் வேட்கையேன்

இ - ள். மிக்க தவத்தினையுடையீர், இவ்வினவிற்கு ஓர் உத்தரமில்லை; ஆயினும் யான் கருதியதொன்றுண்டு; அதுயாதெனின், மதுரையாகிய

பழையவூரிற்சென்று நிருமித்தபொருளைத்தேடக்கடவேமென்னும் வேட கையையுடையேயுரையினேனென்று சொல்லவென்க.

முன்னர்க்காதையில் * "சென்ற கலமே, நிலந்தபொரு ளீட்டுதலுற் றேன்" என்றுரைகலின், அதனை வணிபொருளென்றான். இன நியாயத் திற்றேறும்பொருளெனினுமமையும். அன்றி, இதற்கு இத்துணைப்பொரு ட்கு மேற்பட்டதே தானம் பண்ணக் கடவேனென வணிந்தபொருளென் பாருமுளர். எனவினை ஒருசொல் வருவிக்க.

இனிக் கவுந்தியடிகள் கூறுவார்.

(கு - பு.) [உரையாட்டில்லை - சொல்லலாவதொன்றில்லை ஒருவாசகம். மூதூர்க்கண்ணே பொருளீட்டும் வேட்கையென : பொருள்வணிதல் வேட் கையென்க ; வணிதல் - தன்னிடத்தாக்குதல் ; இன்னதற்கு மேற்பட்டது தானத்துக்கே என்று வரைந்திடுதலுமாம்.] நிருதித்த-யான் சங்கல்பித்த. வேட்கை - விருப்பம். சென்றகலமீட்டு என்னும் மேற்கோளுருக்கு - முன்பு நான் வாங்கியனுப்பிய ஆபரணத்தையும் அல்லாக் கெட்ட பொருளையும் தேடி த்தொகுத்தலித் துணிந்தேனென் றவொருவன். வணிதல் - வணிகஞ் செய்தல்.

நிஉ - நிச. பாடகச் சீறடி பரற்பகை யுழுவா
காடிடை யிட்ட நாடுநீர் கழீஇ
கரிதிவள் செவ்வி யறிகுநர் யாரோ

இ - ள். இனி அங்ஙனங்கருத்தாயின், இவளது பாடகமணிந்த சிறிய அடி பருக்கைகயாகியபகையை வெல்லமாட்டா ; ஆதலால் நீர் காடுநாடுமென் னும் இவ்வழியைக்கடத்தற்கு இவள் செவ்வி எற்றதனை ; இனியுழ் என் செய்துமுடிக்குமோ ; அதனை அறிவாரார்என்றுரைன்க.

என்றகருத்து : அடி பரற்பகையுழுவா : வழி காடிடையிட்டநாடு : இவள் அதற்கேற்றதன்மையளல்லள் ; இனி உழ் என்செயுமோ, இதனை யாரறிய வல்லாரெனப் பரிவுறல் தோன்றநின்றது.

(கு - பு.) [பரற்பகை உழக்கமாட்டா. காடும் நாடுமாகிய வழிக் டக்க. அரிதிவள்செவ்வி - இவள் செவ்வியில் மென்மையால் நடக்குந்தனை மையிலளென்றதாம். அறிகுநர்யாரோ-வல்லளாகவும் அறிக்குமன்றே.] உழ் - விதி. பரிவுறல் - இரங்குதல்.

நிந. உரிய தன்றீங் கொழிகென வொழியீர்

இ - ள். இவையேயன்றியும் குடிப்பிறப்பிற்கும் இவளை ஒருங்கு கொண்டு சேறல் ஏலாதாகலின் இனிச் செலவை ஒழிமினென்று யாமொழி ப்பவும் ஒழிகின்றிலீராயினீரென்றுரைன்க.

---

* கனைத்திறமுரைத்தகாதை, எசு - எந.

ஒழிகென வொழியீவென்பதற்கு இவர்க்கு எதிர்வதறிந்து கூறிற வெனின், ‡ “தவந்தரு சிறப்பிற் கவுந்தி.....உண்ணா நோன்போ டுயிர் பதிப் பெயர்ந்ததும்” என நீர்ப்படையுள் மாடலன் கூறுதலானும், அடைக்கலக்காதையில, § “தன்குல வாண, ரரும்பொருள் பெறுநரின் விருந் தெதிர் கொண்டு, கருந்தடங் கண்ணியொடு கழுமனைப் படுத்துவ, ருடைப் பெருஞ் செல்வர் மனைப்புகு மளவு, மிடைக்குல மடந்தைக் கடைக்கலந் தந்தேன்” எனவும், $ “தாயு நீயே யாகித் தாங்கு” எனவும், || “மிகப் பெரின்பந் தருவது கேளாய்” எனவும் ஒருபொழுதிற்கு இத்துணை ஓம் படையெல்லாம் கூறவேண்டாவாகலானும் இவர்க்குத் தவப்பயனலே சயிந்தலன்றிக் காலவுணர்ச்சியின்மையுணர்க.

(கு - டு.) ஒருங்கு கொண்டுசேறல் எலாதி - கூட அழைத்துக்கொ ன்றுபோதல் பொருந்தாது. செலவு - செல்லுதல். எதிர்வது - இனிவருவது. தவாதரு என்னும் மேற்கோளுக்குத் தவ ஒழுக்கம் வளருகின்ற சிறப்பை யுடைய கவுந்தியென்னும் முதியவள் .....உணவுண்ணுமையாகியவிரதத் தினை உயர்ந்த தனது இருப்பிடத்திலகுப் புறப்பட்டதும் என்று பொ ருள். நீர்ப்படை-இந்நூலின் உள-வது காண்க; வஞ்சிக்காண்டத்தில்உள்ளது. மாடலன் - தலைச்செயகானத்துள்ள ஓர்ந்தணன; கோவலனுடைய நட்பா ளன். கோவலன மதுரையிற்கொலையுண்டது முதலியவற்றைக் காவிரிப் பூம்பட்டினத்தார்க்குச் சொல்லித் தன்செ.. யரில் அவர்களிற் சிலர் இறந் தமை தெரிந்து அப்பாவத்தைப்போக்குதற்பொருட்டுப் போய்க் கங்கை யாடி மீளுகையில் இடையே சேரன் செங்குட்டுவனைக் கண்டு அளவளாவி வஞ்சி நகரஞ்சார்ந்து யாகஞ்செய்யும்படி தூண்டி அதுசெய்வித்து அவனை லைவழிப்படுத்தினவன். அடைக்கலக்காதை - இந்நூலின் பதினைந்தாவது பகுதி; மதுரைக்காண்டத்திலுள்ளது. தன்குலவாணர் என்பதற்குப்பொ ருள் - இவன்குலத்திலுள்ள இவ்வூரிலவாழ்வோர் ..பறுதற்கரிய பொரு ளைப்பெற்றுரைப்போல நல்விருந்தாக எதிர்கொணரு கரிய பெரிய கண்ணி யையுடையாளோடு இவனைத் தங்கள் காவலையுடைய மனையகத்தே கொ ண்டு சென்று வைத்துக்கொள்வார்கள்; அங்ஙனமாகிய உடைய பெரிய செல்வ ருமனையகத்தே சென்று புகுமளவும் இடைக்குலமடந்தாய், உனக் குநான் இவனை அடைக்கலமாகத்தந்தேன் என்க. தாயு நீயேயாகித் தா ங்கு எனபதற்கு - இவளுக்கு நற்றாயும் நீயேயாய்த் தாங்குவாயாகவென்று பொருள். மிகப் பேரின்பந்தருவது கேளாயென்பதற்கு-பின்பு மிகப் பேரின் பந் தருவதனை யான் சொல்ல நீ கேளாயென்றுபொருள. இவைமூன் றும் மாதரினைபழிச்சிக்கிக் கன்னைகிவிதேயமாகக் கவுந்தியடிகள் கூறும் வார்த்தை. முப்பலை - காவல. கால உணர்ச்சி - நிகாலஞ்ஞானம்.

---

† நீர்ப்படை, எசு - அடி

§ அடைக்கலக்காதை, கஉசு - கஅo

$ அடைக்கலக்காதை, கஉசு.

கநo.

நிசு - சுங. மறவுரை நீத்த மாசறு கேள்வியர்
றறவுரை கேட்டாங் கறிவகை யேத்தத்
தென்றமிழ் நன்றுட்டுத் தீதுதீர் மதுரைக்
கொன்றிய வுள்ள முடையே னுகலிற்
போதுவல் யானும் போதுமி னென்ற
காவுந் தியையையைக் கைதொழு தேத்தி
யடிக ணீரே யருளுதி ராயினித்
தொடிவளைத் தோளி துயர்தீர்த் தேனென

இ - ள். மறவுரைகளை நீத்திருக்கும் குற்றமற்ற பொருட்பயனையுடையவர்தம்நூலையுங்கேட்டு அந்த ஆகமப்படியே அறிவகையேத்துதற்குத் தென்கின்கணுள்ள தமிழ்நாட்டின்கண்ணதாகிய குற்றந்தீர்ந்த மதுரைக்குப்போதற்கு முன்னே ஒருப்பட்ட உள்ளமுடையேனுதலின், யான்போகுவேன்; நீரும் போதுமினென்ற கவுந்தியடிகளைக் கையாற்றொழுது நாவாலேத்தி, அடிகளே! நீரே இதுசெய்வீராயின், இவ்வகைவாகிய வகைபொருந்திய தோளினையுடையாளுடைய துயரெல்லாம் இப்பொழுதே போக்கினனென்றுவென்று சொல்லுவெனக்க.

நீயிரே இதுசெய்வீராயினென்பது ஓர் வழக்கு. எகாரத்தை இசைநிறையாக்கலுமொன்று. தொடி - வளவு; *"தொடிக்கட் பூவை" என்றாகலின். நீத்தென்றும் பாடம்.

(கு - பு.) [மதுரைக்கொன்றிய வென்பதற்கு - போகவென ஒருசொல்வருவிக்க. என்தொடிவளைத்தோளி துயர்தீர்த்தேனென்று கோவலன் சொல்லை.] மறவுரை - குற்றத்தோடு பொருந்தியவார்த்தை; அவை - பொய், கோள், கடுஞ்சொல், பயனில்சொல் என்பன. நீத்தல் - விடுதல். கேள்வியர் - கேட்கப்படும் நூற்பொருள்களைக் கற்றறிந்தார் கூறக் கேட்டுள்ளவர். அறவுரை - தருமசாஸ்திரம். அறிவன் - எல்லாப்பொருளையும் அறியும் அறிவையுடைய அருகக்கடவுள். ஏத்துதல் - துதித்தல். தமிழ்நாடு - பாண்டிநாடு. தமிழ்மூனிவராகிய அகத்தியருக்கும் தமிழைவளர்த்த பாண்டியர்களுக்கும் சங்கப்புலவர்களுக்கும் உறைவிடமாதலால், பாண்டியவளநாடு செந்தமிழ்நாடு எனப்படும். ஒருப்பட்ட - உடன்பட்ட. தொடிக்கட்பூவை என்னுஞ் சிந்தாமணி மேற்கோளுக்கு - தொடர்போல் வட்டமான கண்ணையுடைய பூவையென்பது நச்சினார்க்கினியருரை. தொடிவளவென்பது, அடியார்க்குநல்லார் கருத்து. நீத்து எனற பாடத்துக்கு மறவுரைகளை நீத்தலாற் குற்றமற்ற கேள்வியையுடையாரென்க.

---

* சீவகசிந்தாமணி, தூமமாலையாரிலம்பகம், அஉ : "வடிக்கண் மகளிர் வைத்த மரகதநன் மணிக, ளொடிக்கச் சுடர்விட் டுமிழு மொளியம் பிணையொன்றணுகிக், கொடிப்புல் லென்று கறிப்பா ரிவிற் குலவி வளைப் பத், தொடிக்கட் பூவை நோச்கி நகுமா றெளிதோ காண்மின்."

சுசு - சுருு. கோவலன் காணைய் கொண்ட விற்றொறிக்
கேதந் தருவன யாங்கும்பல கேண்மோ

இ - ள். கோவலனே, நாம் போவதாகவுட்கொண்ட இற்செறியிடத்து வருத்தத்தைதத் தருவன எவ்விடத்தும் பலவுள ; அவற்றை நீயறியாய்; ஆதலால், யான் சொல்லக் கேட்பாயாகவென்றுரைத்க.

காணைய் - நீ முன்பு அறியாய். இற்செறி - வடகரைவழி. மோ - முன்னிலையசை.

சுசு - எக. வெயினிறம் பொறுஅ மெல்லியற் கொண்டு
பயில்பூந் தண்டலைப் படர்குவ மெனினே
மண்பக வீழ்ந்த கிழங்ககழ் குழியைச்
சண்பக நிறைத்த தாதுசேர் பொங்கர்
பொய்யறைப் படுத்துப் போற்று மாக்கட்குக்
கையறு துன்பங் காடடினுங் காட்டும்

இ - ள். வெயினினது நிறத்தைக் கண்ணுற்பார்க்கவும் பொறுத இம்மெல்லிய இயல்பினையுடையவளைக்கொண்டு நாம் பூப்பயிலும் தண்டலையுடு போகக்கடவேமென்பேமாயின், அவ்விடத்து நிலம்பிளக்கும்படி இடங்கொண்டு கீழ்வீழ்ந்த வள்ளிகிழங்கை அகழ்ந்துகொண்ட குழிகளைச் சண்பகமரங்கணிறைத்த பூந்தாதுசேர்ந்த பழம்பூ பொய்க்குழிப்படுவித்து அவ்விடங்களை அறிந்து பாதுகாத்திச்செல்லாதமாக்கட்குச் செயலறுதியாகிய துன்பத்தைதக் காட்டுதலையுஞ்செய்யுமென்றுரைத்க.

பொங்கர் - இங்கே வாடாற்பூ. அதுபோர்த்தலாற் பொய்யறைப் படுத்தென்றார். * "பொங்கர் வெண்பொரி சிந்தின புன்கு" என்பதும் மேலும். கையறு துன்பம் - மீளாத்துன்பமுமாம். காட்டல் - தருதல்.

(சுசு)பொங்கர் (எo) படுத்துக் (எக) காட்டுமென்க.

(கு - பு.) [படர்குவமாயினென்றுள், தன்னையும் உளப்படுத்தி. சண்டம் குழியைநிறைத்த பொங்கர். போற்றுமாக்கள் - பரிகரித்துப்போகாமாக்கள். குழியைச் சண்பகநிறைத்த தாது சேர்பொங்கர் பரிகரியாமாக்கட்குத் துன்பந்தரினுந்தரும்; பூவானிறைத்தல் பெற்றும்; தாது சேர் பொங்கரென்றலின். பொங்கர் - சோலையுமாம்.] மெல்லியல் - பண்புத்தொகை யன்மொழி. தண்டலை-தண்மையாகிய இடத்தையுடையது எனச் சோலைக்குப் பண்புத்தொகையன்மொழியாகிய காரணப்பெயர். "பொங்கர்" என்பதற்கு - புன்கமரங்கள் பழம்பூவாகிய வெள்ளியபொரிகளைச்சிந்தினவென்று பொருள்.

எஉ - எங. உதிர்பூஞ் செம்மலி னெதிங்கினர் கழிவோர்
முதிர்தேம் பழம்பகை முட்டினு முட்டும்

---

* வேட்டுவவரி, "செம்பொன்."

இ - ள். அங்ஙனம் உதிர்ந்த வாடற்பூ மறைத்த குழியுள்ளவழி நாற்றத்திற்கு நிலனேக்கி ஏதுங்கிச்செல்லாவாறை முற்றிப்பழுத்து விண்டு தேனிறைந்து ஊகும் பலாப்பழங்கள் தாழ்ந்தகோட்டிடன்கணிருந்து பகைபோல மூட்டுதலையுஞ்செய்யுமென்றுரைக்க.

இனித் தேனெண்பதனை இனிமையாக்கித் தெங்கம்பழம் முட்டுமெனினு மமையும். முட்டினுமுட்டுவனென்பது பாடமாயின், கழிவோர் செய்யிழந்து செய்வானென்க. உம்மையை ஐயவும்மையாக்கிப் பொருளுரைக்க. படர்குவமெனினேயெனக் கழிவோர்கருத்தைக் கொண்டு கூறினார், உலகியலாகலான்.

(கு - பு.) [மேல்தூங்குகிற பழமாகிய பகையிலே முட்டினும் முட்டுவர்.] செம்மற்பூ - பழம்பூ. கோடு - மரக்கிளை. தெங்கம்பழம் - முற்றின தேங்காய்; "காய்மாண்டதெங்கின்பழம்" என்றார் சிற்காமத்தும்.

எசு - எஞ. மஞ்சளு நிஞ்சியு மயங்கரில் வலயத்துச்
செஞ்சுஜோப் பலவின பாற்பகை யுறுக்கும்

இ - ள். அவ்வாறன்றி வெள்ளிடைப் போவோமெனின், அங்கு மஞ்சள்முதலியன தம்மில் தலைமயங்கிய பிணைக்கத்தையுடைய தோட்டங்களிற் பாத்திதோறும் பலாப்பழத்தின் செஞ்சுளைகளிலுள்ள வெண்காழாகிய பருக்கைகள் இவள்மெல்லடிக்குப் பகையாய் உறுத்தலைச் செய்யுமென்றுரைக்க.

வலயம் - பாத்தி. வலயத்தோடு பரலும் பகையாயுறுக்குமெனினுமமையும். உறுக்கும் - உறுத்தும். என்றகருத்து: மஞ்சள் முதலியன நிலவண்மையால் முற்றிப் பருவஞ்செய்தமுளை சருகின்மலைந்திகிடந்தவற்றோடு பரலும் உறுத்துமென்பதாம்.

(கு - பு.) [வலயம்-தோட்டம்.] வெள்ளிடை - வெளியிடம். பிறழ்க்கம் - நெருக்கம்.

எசு - எஎ. கயனெடுங் கண்ணி காதற் கேள்வ
வயலுழைப் படர்குவ மெனினே

இ - ள். கயல்போலும் கண்ணினையுடையாள் காதலிக்கப்பட்ட கேள்வனே, அங்ஙனம் சோலையும் தோட்டமுமாகிய கரைவழியன்றி வயல்வழியேபோக்கக்கடவேமென்பேமாயின்,

(கு - பு.) கயல் - ஒருவகைமீன்; இது பிறழ்ச்சியாற் கண்ணுறுக்கு உவமம். கண்ணி, இ - பெண்பாற் பெயர்விகுதி. காதலித்தல் - விரும்புதல். கேள்வன் - கணவன்.

எஅ - அக. ஆங்குப்
பூநா றிலஞ்சிப் பொருகய லோட்டி
நீர்நாய் கௌவிய நெடும்புற வாஅல
மலங்குமிளிர் செறுவின் வலங்கப் பாயிற்
கலங்கலு முண்டிக் காரிக

இ - ள். தம்மிடத்துமலர்ந்தபூக்களின் மணங்கமழாநின்ற குளங்களில் கீர்காய் பொருகின்றகயல்கள் வெருவியோடவேவாட்டிக் கௌவப்பட்ட நீண்ட முதுகையுடையவாளை மலங்குகள் நெளியுருசெறிவிற் குறுக்கேபாயுமாயின், இம்மங்கை கலங்குந்தன்மையுடையாளெனவுங் கூடுமென்றவென்க.

கீர்காய் கௌவியவாளை பொருகயலோட்டிப் பாயினெனினுமமையும். இதறற்சொல்லியது: மீனைதேதரும் கீர்காய்காணினும், இடையே பொருகயல்கள் உகளக்காணினும், வாளை பாயக்காணினும், மலங்கு மிளிரக்காணினும் மனத்திற் கலங்கலுமுண்டு இக்காரிகையென்பதாம்.

(கு - பு.) வாளை மலங்கு என்பன - மீனின்ஜாதிபேதம். செறுவயல். காரிகை - அழகுடைய பென்ன. உகள - புரண்டுபாய.

அக - உஅ. ஆங்கட்

கரும்பிற் றெடுத்த பெருந்தேன் சிலதந்து
சுரும்புசூழ் பொய்கைத் தூநீர் கலக்கு
மடங்கா வேட்கையி னறிவுரு வெய்திக்
குடங்கையி னெண்டு கொள்ளவுங் கூடும்

இ - ள். அஃதன்றியும், * கரும்பல்லதுகாடின்மையான் அவ்விடத்து உளதாய கரும்பின்வைத்த பெருந்தேன் அலவ கண்முற்றி நெருங்குதலானே அழிந்தொதாழுகிச் சுரும்புசூழப்பட்ட பொய்கையின் நல்லநீரோடு சென்று கலந்துவிடும்; ஆதலான் அதனை அறியாமல் தணியாத நீர்வேட்கையால் இவள் தன்குடங்கையால் முகந்துகொண்டு பருகவுந்தகுமென்றவென்க.

குடங்கையாவது ஐந்துவிரலுங்கூட்டி உட்குழிப்படது; என்னை? "குடங்கையென்பது கூறுங் காலை, யுடங்குவிரற் கூட்டி யுட்குழிப் பதுவே" பன்றாகலின். இதறற்சொல்லியது: நமது தரிசனத்து விலக்கப்பட்டவாற்றல், தேனுண்டலைப் பரிகரிக்கவென்பதாம். எனவே ஊனையும் உடன்கூறிற்றும். மேலும் இவ்வாறு வருவனகொள்க.

(கு - பு.) [அறிவருவெய்தி - அறிவுமயங்கி. வேட்கை - தண்ணீர்த்தாகம்.] சுரும்பு - வண்டு. பொய்கை - நீர்நிலை. முகந்து - மொண்டு. பருகுதல் - குடித்தல். உடங்கு - ஒருங்கு. தரிசனம் - மதக்கிரந்தம்.

அசு - அக. குறுநரிட்ட குவளையம் போதொடு
பொறிவரி வண்டினம் பொருந்திய கிடக்கை
நெறிசெல் வருத்தத்து நீரரு வெய்தி
யறியா தடியாங் கிடுதலுங் கூடும்

இ - ள். கானபறிப்பார் பறித்து வரம்பிலிட்ட குவளைப்பூவுடனே தம்மெய்யிற் பொறியையும் வரியையுமுடைய வண்டினம் மதுமயக்கத்தாற்

---

* "கரும்பலாற் காடொன் றில்லாக் கழனிசூழ் பழன நாடும்" என்றார் சிந்தாமணியிலும்; முத்தியிலம்பகம், கoச.

போகவறியாது உள்ளொடுங்கிக்கிடப்பனவற்றை வழிவரும்வருத்தத்தாலே கீர் அறிவுமயங்கி வறும்பூவெனக்கருதி அவற்றின்மேல் அடியிடவுங் கூடுமென்றுரைன்க.

இதனுற்சொல்லியது உயிர்க்கொலைபுகாமற் பரிகரிக்கவென்பதாம்.

(கு - பு.) [குறுதல்-பறித்தல்.] பொறி - புள்ளி. வரி-கோடு; இசைப் பாட்டுமாம்.

கூ0 - கூசு. எறிநீ ரடைகரை யியக்கந் தன்னிற்
பொறிமா னலைவனு நந்தும் போற்றி
தாழுடி யொதுக்கத் துறுநோய் காணிற்
றுழ்தரு துன்பந் தாங்கவு மொண்ணை

இ - ள். எறியுநீரையுடைய பெருவாய்க்கானினது அடைகரைவழியே போகக்கடவேமெனவேமமாயின், அவ்வடைகரைநீரிலுள்ளனவாகிய பொறி வரிகளினழகையுடைய நண்டும் நத்தையும் உள்ளவழியறிந்து பாதுகாவாது முன்புநடக்கு முறைமையான்அடியிட்டுநடக்குநடையின் அவை தாம் உறக்கடவோரை நம்மாலுறுமாயின் அதனல் நமக்குவருங் கொலைப்பாவம் நம்மால் தாங்கவுமொண்ணாது.

எறிநீர் - வாய்த்தலையினின்று குதித்துவரும் வாய்க்கானீர். இயக்கம்-வழி. நந்து - ஈண்டு நத்தை. ஊழ் - முறைமை. ஒதுக்கம் - நடை. நோயென்றார்; கொலையென்று வாக்காற்கூறவுமாகாமையின். இக்கொலைப்பாவம்ஒன்றுணும் கழுவப்படாது; அதுவேயுமன்றி மறுமைக்கண் நரகத்திலுறுத்தின்பமும் நம்மாற்றுங்கலாமளவிற்றன்றென்பதனல், உம்மை எச்சவும்மையாயிற்று. அடைகரை - கடற்கரையென்பாருமுளர்,

(கு - பு.) நந்து - இங்கே சங்கன்று. "கோறல், பிறவினை யெல்லாந் தரும்" என்றார் திருவள்ளுவனாரும்.

கூசு - கூஎ. வயலுஞ் சோலையு மல்லதி யாங்கணு
மயல்படக் கிடந்த நெறியாங் கில்லை
நெறியிருங் குஞ்சி நீவெய் யோளொடு
குறியறிந் தவையவை குறுகா தோம்பென

சோலையுமெனவே ஒருசார்வுபற்றித் தோட்டமுமடங்கிற்று. வயலும் சோலையுமென்பனவற்றைக் கூறியமுறையானே எதிர்நிரனிறையாகக்கொள்ளுவாருமுளர்.

இ - ள். இங்குக்கூறியவயலும் அங்குக்கூறியசோலையுமல்லது வேறு படக்கிடக்குநெறி மேல் நாஞ்செல்லுகின்றவிடத்திற்கில்லையாதலான், நெறித்த குஞ்சியையுடையாய், நீ நின்னைவிரும்பிய மனைவியோடே அவ்வவ்விடங்களைக் குறிப்பாலறிந்து அவை அபசாரங்களுறுமற் பாதுகாப்பாயாகவென்றுரைன்க.

வெய்யோ[illegible]க்குக் குறுகாமலெனினுமமையும்.

(எக) காட்டினுங்காட்டும்; (எங)முட்டினுமுட்டும்; (எரு) பரற்புகையுறுக்கும்; (அக) கலங்கலுமுண்டு; (அரு) கொள்ளவுங்கூடும்; (அகூ) இடுதலுங்கூடும்; (கூங) தாங்கவுமொண்ணை; ஆகலாற் (கூஎ) குறியறிந்து அவையவை குறுகாதோம்பென்றுரைன்க.

இங்ஙனம் மென்மைத்தன்மைகூறுவார், வருணனைகளையும் உடன்கூறினரைன்க. இத்தனையும் கவுந்தியடிகள் தமது பள்ளியில் இருந்து கூறினரென்க. வடலுமனவே வாய்க்காலுமடங்கிற்று.

(கு - பு.) [ஓம்படுகிவனைசென்மி.] குஞ்சி - தலைமயிர். வெய்யோள் என்றவிடத்து வெய் என்றுவிகாரப்பட்ட வெம்மையென்னும் உரிச்சொல்லுக்கு விருப்பமென்று பொருளாம்; "வெம்மைவேண்டல்" என்றார் ஆசிரியர் தொல்காப்பியனார்.

கூஉ - கரக. தோமறு கழைதருந்தி சுவன்மே லறுவையுங்
காவுந்தி யையைகைப் பீலியுங் கொண்டு
மொழிப்பொருட் டெய்வம் வழித்துணை யாகெனப்
பழிப்பறுஞ் சிறப்பின் வழிப்படர் புரிந்தோர்

இ - ள். கவுந்தியடிகள் கழைதருமுதலியவற்றைக்கொண்டு பஞ்சமந்திரமே நமக்கு வழித்துணையாகவெனச்சொல்லிச்செல்ல, அவரோடு பழித்தலறிய ஒழுக்கத்தோடு வழிச்சலனைவப்புரிந்தவரென்க.

தோம் அறு - குற்றமற்ற. கழைதரு - ஐயக்கழைதரு. சுவல்மேல் அறுவை - தோளிலிடுமுறி. மொழிப்பொருட்டெய்வம் - பொருண்மொழியாகியதெய்வம். ஆவது * பஞ்சமந்திரம்; அ சி ஆ உ ஸா=அ ஸி ஆ உ ஸா. இனிக் கொண்டென்பதனைக் கொள்ளவெனத்திரித்து அடிகளிதுசெய்ய இவர்கள் துணையாகவென்றுரைனினுமமையும்.

(கு - பு.) கழைதரு - பிக்ஷாபாத்திரம்; இரப்போர்கலம். [பொருண்மொழி - உபதேசம.] பீலி - மயிலிறகு. ஆகெண - வியங்கோள்விகாரம்.

கரூ - ககக. கரியவனை புகையினும் புகைக்கொடி தோன்றினும்
விரிகதிர் வெள்ளி தென்புலம் படரினுங்
கால்பொரு நிவப்பிற் கடுங்குர லேற்றோடு
சூன்முதிர் கொண்மூப் பெயல்வளஞ் சுரப்பக்
குடமலைப் பிறந்த கொழும்பஃ றூரமொடு
கடல்வள மெதிரக் கயவாய் நெரிக்குங்
காவிரிப் புதுநீர்க் கடுவரல் வாய்த்தலை
யோவிறந் தெதாலிக்கு மொலியே யல்ல
தாம்பியுங் கிழாரும் வீங்கிசை யேற்றமு
மோங்குநீர்ப் பிழாவு மொலித்தல் செல்லா

இ - ள். கிரகங்களிற் சனிக்கிரகம் இடபம் சிங்கம் மீனமென்னுமிவற்றிலேறுமாறுடனும் ஆகாயத்தே தூமக்கோள் எழுனும், விரிந்த கதி

* இந்தப் பஞ்சமந்திரத்தைப் பஞ்சநமஸ்காரமென்பர் ஜைனர்.

ரையுடைய சுக்கிரன் தென்றிசையிலே பெயரினும மாற்றுப்பொருந் குடகவரையினது உச்சிக்கண்ணே கழிய குரலையுடைய உருமேற்றோடு சூல்முதிர்ந்த பருவமுகில் தன்பெயலாகிய வளத்தைச் சுரத்தலாலே அவ் வரையிற்பிறந்த பலபண்டத்தோடு கடுகிவருதலையுடைய காவிரியினீர், முகத்தைக்குத்தியிடிக்குங்கடல் தன வளத்தைக்கொண்டு எதிர்தலாலே தேங்கி, வாய்த்தலைக்கிட்ட கதவின்மீதெழுந்து குதிக்கின்ற அப்புதுப்புனலொலியல்லது ஆம்பிமுதலாயின ஒலித்தல்செல்லாவென்க.

கரியவன்-சனி. புகைக்கொடி - வட்டம், சில, நுட்பம், தூமமென்னும் * கோட்கணென்கிறும் தூமக்கேகான். † "மைம்மீன் புகையினுந் தூமந் தோன்றினுந், தென்றிசை மருங்கின வெள்ளி யோடினும், வயலக நிறையப் புதற்பூ பலர, மனைத்தலை மகளை யீன்ற வமர்க, ணுமா னொடுங்கை நன்புல் லாரக், கோழ்ல் செம்மையிற் சான்றோர் பல்கிப், பெயல்பிழைப் பறியாப் புன்புலத் தது வே, பிள்ளை வெருகின் முள்ளெயிறு புலையப், பாசிலை முல்லை முகைக்கு, மாய்தொடி யரிவையர் தந்தை நாடே." ‡ இடா - இறைகூடை. § பத்துப்பாட்டு, மதுரைக்காஞ்சி, அசு-கூ.

---

* இவற்றைக் கரந்துரைத்தேகாட்கள்ளனடார்.

† புறநானூறு, ககஎ: "மைம்மீன் புகையினுந் தூமந் தோன்றினுந், தென்றிசை மருங்கின வெள்ளி யோடினும், வயலக நிறையப் புதற்பூ பலர, மனைத்தலை மகளை யீன்ற வமர்க, ணுமா னொடுங்கை நன்புல் லாரக், கோழ்ல் செம்மையிற் சான்றோர் பல்கிப், பெயல்பிழைப் பறியாப் புன்புலத் தது வே, பிள்ளை வெருகின் முள்ளெயிறு புலையப், பாசிலை முல்லை முகைக்கு, மாய்தொடி யரிவையர் தந்தை நாடே."

‡ இடா - இறைகூடை. § பத்துப்பாட்டு, மதுரைக்காஞ்சி, அசு-கூ.

கடம். பல் + தாரம் = பற்றாரம்; தனிக்குறிலடுத்தலகரவொற்றுத்தகாரம்வர ஆய்தமாயிற்று; இது, 'ஆய்தக்குறுக்கம்' எனப்படும். தூம்பு - மதகு. ஓவி றந்து என்பதற்கு - நீங்குதலிலையெழுந்து என்பது இரண்டாவது பொருள்; ஓ - முதனிலைத்தொழிற்பெயர். ஆம்பி கிழார், ஏற்றம், பிழாவென்பன - நீரிறைக்குங்கருவிகளின்பேதம். வீங்கிசைமேயற்றம் - மிக்கவொலியையுடைய ஏற்றமென்னுங்கீரிறைகருவி. ஓங்குகீர்ப்பிழா - மிக்கநீரைமொள்ளுங்கருவி. "நீர்த்திவ்வு" என்னும் மேற்கோளுரைக்கு - வயல் அகைய நிறைக்கும் கயம் நீர்த்திவ்வும் நிறைத்தொழுவர் பாடு சிலம்பும் இசை, ஏற்றத்தோடுவழங் கும் அகல் ஆம்பியின் இசை, மென்றாடைவண்கிழார் இசையென்று அங்கயம்; வயல் தழைக்கும்படி நீரைநிறைத்தற்குக்காரணமான சூளங்களினிசை இடாவால முகந்தூக்காள்ளும் நிரைபாகினை று தொழில் செய்வாரிடத்தே ழுமக்கும் ஓசை, ஏற்றத்துடனே உலாவும் அகன்றடன்றிப்பத்தயின் ஓசை, மிதித்தென்ற கட்டுக்கையையுடைய வலிய பூட்டைப்போறியின் ஓசை என்பது ரச்சிரைக்கினியருரை. பிறர் என்றது, பத்துப்பாட்டினுள் மதுரைக்காஞ்சி யின் நூலாசிரியராகிய மாங்குடிமருதனாரை. [தாரம் - சந்தனம் அகில் முதலாயின. கபவாய் - புகார்.]

கசஉ - கசசூ. கழனிச செந்நெற் கரும்புகுழ் மருங்கிற்
பழனத் தாமரைப் பைம்பூங் கானத்து

இ - ள். அங்ஙனமொழித்தல்செல்லாக் கழனியிற் செந்நெலும் கரும் புஞ் சூழ்ந்த இடத்தையுடைய நீர்நிலச்செறுவினுண்டாகிய தாமரைக்கா ட்டிடலென்க.

(கு - பு.) பைம் பூங கானம - பசிய அழகிய காடு. தாமரைக்காடு என்றது, தொகுதியை.

கசஎ - கசகூ. கடாஅ மேகாழியுங் கதிர்கழை முளையுந்
செங்கா லன்னாழும் பறைகாற் றெகாக்குங்
கானக் கோழ்யு நீர்நிறக் காக்கையு
முள்ளூர் மூரலும் புள்ளூரம் புதாவும்
வெல்போர் வேந்தர் முனையிடம் போலப்
பலவேறு குழுஉக்குரல் பாந்த வோசையும்

இ - ள். கம்புட்கோழியுமுதலியன வெல்லும்போரைவல்ல அரசரிருவர் பொருபடைம்போலப் பலவேறுவகைப்பட்ட நிறத்தையும்ஒலியையுமுடை யனவாயொலிக்கும் மிக்க ஓசையுமென்க.

கூக்குரலும் பாடம். கம்புள் - சம்பங்கோழி. கானக்கோழி - காடை க்கோழி; நிலவண்ணமையாக்கிக் காட்டுக்கோழியெனபாருமுளர். நீர்நிற க்காக்கை - நீர்க்காக்கை. உள்ளூர - உள்ளான். ஊரல் - குரலை; நீர்மே லூர்தலினூரல் ஆகுபெயர். புள்ளூர - கானங்துட்புள். போதா - பெருநா ரை; மடக்காரை; புதா - விகாரம். வெல்போரும், முனையிடமும் - வினை த்தானை. குழுஉக்குரல் - பலவாயொன்றுனை ஓசை.

(கு - பு.) கம்புட்கோழி - கம்புளாகிய கோழி என இருபெயரொட்டுப் பண்புத்தொகை; முன்னது சிறப்புப்பெயரும், பின்னது பொதுப்பெயருமாம். கணைகுரல்நாரை -ஒலிக்கின்ற குரலையுடையநாரை. செங்கால் - சிவந்தகால். பைங்கால் - பசியகால். உள்ளான் - ஓர் குருவி. ஊரல் - தொழிலாகுபெயர். [கம்புட்கோழி - ஒரு சாதி.]

கஉ0 - கஉச. உழாஅ நுண்டொளி யுள்புக் கழுந்திய
கழாமயிர் யாக்கைச் செங்கட் காரான்
சொரிபுற முரிஞ்சப் புரிஞெகிழ் புற்ற
குமரிக் கூட்டிற் கொழும்பல் லுணவு
கவரிச் செந்நெற் காய்த்தலைச் சொரிய

இ - ள். உழவராலுழப்படாத குழியிற் சேற்றினுட்புக்கழுந்திய கழுவாதமயிரையுடைய உடம்பையும் சிவந்தகண்ணையுமுடைய எருமை தன் தினவையுடையமுதுகை உரிஞுதலாலே புரிதேய்ந்து அற்றுச்சரிதலுற்ற அழிவற்ற புரிக்கூட்டினின்ற வளைய பலவருக்கத்து நெல்லுக்கவரித் தொங்கல்போல விளைந்து கிடக்கின்ற செந்நெற் கதிர்த்தலையிடத்தே சொரியவென்க.

தொளி - சேறு.

(கு - பு.) [உழா நுண்டொளி - தானேபட்ட சேறு. கொழும்பல்லுணவு - பலவர்க்கத்துணவு; அவரை துவரை உள்ளிட்டன.]

கஉந - கஉசு கருங்கை விளைஞருங் களமருங் கூடி
யொருங்குநின் றார்க்கு மொலியே யன்றியும்

இ - ள். அங்ஙனம் நெற்சொரிதலாலே விளைஞரும் களமருங்கூடி ஒன்றுபட நின்றொலிக்கும் ஒலியும், அதுவேயன்றியுமென்க.

கருங்கை - வலியகை. விளைஞர் - பறையர், பள்ளர் முதலாயினர். களமர் - உழவர் கீழ்க்குடிமக்கள். கருங்கை இருவர்க்கும்பொது.

(கு - பு.) [களமர்-உழுகுடிவேளாளர்.] விளைஞர் - தொழிலைசெய்பவர்.

கஉஎ - கஉக. கழிமலர் களைந்து முழிதரா றழுத்தித்
தொடிவளைத் தோளு மாகமுந் தோய்ந்து
சேறுடு கோலமொடு வீறுபெறத் தோன்றிச்
செங்கய னெடுங்கட் சின்மொழிக் கடைசியர்
வெகுகட் டொலைச்சிய விருந்திற் பாணியும்

இ - ள். காலையின் முடித்த பூக்களைந்து முழுத்தமுடியிலே முடியினுறை நெறுக்கிச் சூடிக்கொண்டு வளைந்தவளையையுடைய தோளும் முலையாகமுந்தோய்ந்து சேறுடுகோலத்தோடு அழகுபெறத்தோன்றிச் சிவந்த கயல்போலும் பெரியகண்ணையும் சிறியமொழியையுமுடைய கடைசியர் கடுகமயக்கும் கள்ளை உண்டுதொலைத்ததனாலுண்டான பண்திறத்திற்சேர்ந்து பழகிப்போதாத பாட்டுமென்க.

என்றது மதுமையக்கத்தாற் பஞ்சலித்து மயங்கப் பாடிரூரென்றபடி. இனிக் கடிமலர்களேந்து முடிநாறழுத்தியென்பதற்குப் போகாப்புல்லாகிய கழுநீர்முதலைப் பறித்து மறித்து அதனமீதே முடியிறற்றைப் பகுத்தாடட் டெனினுமமையும். தோளும் ஆகமும் தோய்ந்துசேறுதல் - களித்து ஒருவர்மேல்ஒருவர் சேற்றை இறைத்துக்கொள்ளுதல். சின்மொழி - இழிந்தமொழி; சிலவானமொழியுமாம். விருந்திற்பாணி - தம்மிசையிற் புதுமையுண்டாகப்பாடும் பாட்டெனினுமமையும். இதனைப் பெருமுனையென்பாருமுளர்.

(கு - பு.) கடைசியர் - மருதநிலத்து உழுவர் மகளிர்; இது கடையர் என்பதன் பெண்பன்மை. விருந்து - புதுமை; பண்புணர்த்தும்பெயர்.

கஉஉ - கஉரு. கொழுங்கொடி யறுகையுங் குவளையுங் கலந்து
விளங்குகதிர்த் தொடுத்த விரியல் சூட்டிப்
பாருடைப் பனர்போற் பழிச்சினர் கைதாழ
வேரொடு தினைரூ ரேர்மங் கலமும்

இ - ள். செந்நெற்கதிரோடே அறுகையும் குவளையையும் கலந்துதொடுத்தமாலையை மேழியிலேசூட்டிப் பாரை இரண்டாகப் பிளப்பாரைப்போலப் போற்றுவார் தொழப் பொனனேர்பூட்டிநின்றேரூர் ஏரைப்பாடும் ஏர்மங்கலப்பாட்டுமென்க.

சூட்டித் தொழ நின்றேரூர் ஏர்மங்கலமுமென்க.

(கு - பு.) [குட்டக்கலப்பையிலே சூட்டியென்றுமாம்.] மேழி - ஏர்க்கால்; கலப்பையின் ஓருறுப்பு. போற்றுவார்தொழ - தம்மைத்துதிப்பவர் வணங்க.

கஉச- கஉள. அரிந்துகால் குவித்தோ ரரிகடா வுறுத்த
பெருஞ்செந் நெலின் முகவைப் பாட்டும்

இ - ள். நெல்லையரிந்து போரிட்டார் சூட்டைக் கடாவிடுதலாலுண்டான முகவைப்பாட்டும்,

ஆவது பொலிபாடுதல். முகக்கக் கொடுத்தலின் முகவையாயிற்று.

(கு - பு.) [அரி - அரிந்திடுசூடு. முகவைபாடுவார் - பொலிபாடுவார்; நெலலுமுகந்து கொடுக்கப்படுதலாலே; "புகர்முக முகவை" போல.] சூடு-நெல்முதலியவற்றின் அரிக்குவியல்.

கஉஅ- கஉக. தெண்கிணைப் பொருநர் செருக்குட னெடுத்த
மண்கணை முழவின் மகிழிசை யோதையும்

இது களவழிவாழ்த்து; என்னை? * "தண்பணை வயலுழவனைத், தென்கிணைவன் றிருந்துபுகழ் கிளந்தன்று." வரலாறு: "பகடுவாழ் கென்று பணிவயலு ளாமை, யகடுபோ லங்கட் டடாரித் - தகடுடையாக், குன்றுபோற்

---

*புறப்பொருள்வெண்பாமாலை, வாகைப்படலம், கூஉ.

போர்விற் குரிசில் வளம்பாட, வின்றுபோ மெங்கட் கிடர்" எனவரும். கிணை - தடாரி ; புட்பறையென்பதுங் கொள்க.

இ - ள். தெளிந்த ஓசையையுடைய கிணைப்பொருநர் செருக்குதலோடெடுத்த மார்ச்சனையையுடைய திரண்டமுழவினது கேட்டோர்மகிழும் இசையினதொலியும்,

(கு - பு.) கிணை - மருதநிலத்துப்பறை; ஒருவகைவாச்சியம். பொருநர் - கூத்தர்.

கசo - கசக. பேரியாற் றடைகரை நீரிற் கேட்டாங்
கார்வ நெஞ்சமோ டவலங் கொள்ளார்

இ - ள். பெரிய யாற்றடைகரையிலே இவ்வோசைகளை முன்னுறயிற் கேட்டு நெஞ்சம்விரும்புதலோலே வழிநடத்தலினுண்டான வருத்தத்தை நெஞ்சிற் கொள்ளாராயென்க.

(ககக) பரந்தவோசையும் (கஉசு) ஆர்க்குமொலியும் (கஙக)விருந்திறபாணியும் (கஙஙு) ஏர்மங்கலமும் (கஙஉ) முகவைப்பாட்டும் (கஙக) யதிழைசயோசையுமென்னுமிவற்றைப் (கசo) பேர்யாற்றடைகரைக்கண்ணே நீர்மைபெறக்கேட்டலோலுண்டான (கசக) விருப்பத்தாலே நெஞ்சில் அவலங்கொள்ளாராயென்க.

(கு - பு.) [நீரில் - நீர்மையுடனே. உருவக்கேட்டுப்போதலை.]

கசஉ-கசஎ. உழைப்புலிக் கொழித்தே ருரவோன் கொற்றமொடு
மழைக்கரு வுயர்க்கு மழறறிக முட்டின்
மறையோ ராக்கிய வாவுதி றறம்புகை
யிறையுயர் மாட மெங்கணும் போர்த்து
மஞ்சுசூழ் மலையின் மாணத் தோனறு
மங்கல மறையோ ரிருக்கை யன்றியும்

இ - ள். புலியைத் தன்னிடத்தேயுடைய கொழியையுயர்த்த தேரையுடைய உரவோனுடைய கரிகாலனது கொற்றத்துடனே மழைக்கும் கருப்பத்தைத் தோறறுவிக்கும் அழலில்வளக்குகின்ற சாலையிலுண்டான மறையோராலாக்கப்பட்ட தெவ்வருணவிலாவி இறப்புயர்ந்த மாடமாகிய அகங்களெங்கும் போர்த்தலாலே மேகஞ்சூழ்ந்த மலைபோல மாட்சிமைப்படத் தோன்றும் மங்கலமறையோரிருப்பிடங்களுந்தம், அவலமன்றியும்,

(கு - பு.) [மழைக்குக்கருப்பமாவது - தூமம். அட்டில - மகசாலை. கொற்றத்துடனே மழைக்கருவையுந்தோற்றுவித்து அவ்வளவிலே விளங்கியசாலையென்க. வானவருணவு - சோற்றுவி; அவியிடுகிற ஆயி. இறை -இறப்பு.] மறையோர்-அந்தணர். இருக்கை - தொழிலாகுபெயர்.

கசஅ-கஙஙு. பரப்புநீர்க் காவிரிப் பாவைதன் புதல்வ
ரிரப்போர் சுற்றமும் புரப்போர் கொற்றமு
முழவிடை விளாப்போர் பழவிற லூர்களும்
பொங்கழி யாலைப் புகையொடு பரந்து

மங்குல் வானத்து மலையிற் றோன்று
மூரிடை யிட்ட நாடுடன் கண்டு
காவுத மல்லது கடவா ராகிப்
பன்னட் டங்கிச் சென்ற வொருநாள்

இ - ள். இரப்பவர் சுற்றத்தையும் புரப்பவர்கொற்றத்தையும் தம் மூழ்வினைடத்தே விளைப்போருடைய பழையவயிரமொருங்கிய உவர்களுமாகிய இவ்விருவகையூர்களையும் இடையிட்ட நாடெல்லாங்கண்டு நடக்கூராட் காதமென்னுமெல்லைபல்லது நடந்திதாவெக்கமாட்டாராய்ப் பலநாள்தங்கி நடக்கின்றநாளிலே ஒருநாளென்க.

தூற்றுப்பொலி ஆலையிற்பாகுகாய்கின்ற புகைபாற் பரக்கப்பட்டு இருட்கையையுடைய மேகந்தவழ்ந்த மலைபோலத்தோன்றும் பழவிறலூர் களுமென்க.

(கசஉ) கொற்றத்தையும் (கசஙு) கருவையும் (கசஞ) சுற்றத்தையும் கொற்றத்தையும் (கசடு) அழிவினும் (கரo) உழவினும் விளைப்போரது (கசஎ) இருக்கையும் (கரo) ஊர்களுமென்க.

* காவிரிநீர்கங்கைநீராதலாற் கங்கைப்புதல்வனைக் காவிரிப்புதல்வ னென்றார்; அன்றியும † "மகவாய்வளர்க்குந்தாயாகி" என்பதனாலுங்கொள்க. தோன்றுமிருக்கையும் தோன்றுமூர்களுமென இயையும். அவ்வூர்களிடை யிட்டநாடென்க. உடன்கண்டென்றார், இந்நாட்டுச்சிறப்பெல்லாம் கண்டு தொலைத்துக் கழிதலருமையின். புதல்வராகி உழவிடை விளைப்போரென்க.

(கு - டு.) [காவிரிப்புதல்வர் - வேளாளர். (கரo) விளைப்போரான (கசஅ) புதல்வர் (கரo) பழவிறலூர்களும். புரப்போர் - காக்குமரசர். பொங்கழி - தூற்றுப்பொலி. பரந்து-பரக்க. மங்குல்-இருட்சி. (கசள்) மறை யோரிருக்கையும் (கரo) பழவிறலூர்களும் (கரஉ) மலையிற்றோன்றும் (கரஙு) நாடென்க. (கoக) வழிப்படர் புரிந்தோர் (கரரு) செல்லுநாளுள் ஒரு நாளென்க.] பொலி - நெற்சூலை மகவாய்வளர்க்குந்தாயாகி என்ப தனால்-தனது நாட்டிலுள்ளவர் தனதி புத்திரரையொப்ப அவர்களை வளர்க் குந் தாயாகி இருப்பது காவேரி என்றுபொருள்.

கரஉ-கசஙு. ஆற்றுவீ யரங்கத்து வீற்றுவே றுருகெ
ழுரங்கமை யுடுத்த மரம்பயி லடுக்கத்து
வானவ ருறையும் பூவா வொருசிறைப்
பட்டினப் பாக்கம் விட்டனர் நீங்காப்
பெரும்பெய ரைய வொருங்குட னிட்ட
விலங்கொளிச் சிலாதல மேலிருந் தருளிப்

---

* 'கங்கையாருழைச்சென்று காவிரியாலைவாங்கி'என்று கூறினர் நச்சி னார்க்கினியரும்; இதனைத் தொல்காப்பியப் பாயிரவுரையிற் காண்க.

† கானல்வரி, உஎ.

பெருமக னதிசயம் பிறழா வாய்மைத்
தருமஞ் சாற்றுஞ் சாரணர் தோன்ற

இ - ள். ஆற்றைமறைக்கும் அரங்கத்தில் வேறிடத்தில்லாததன்மைத்தாய் வளைந்த மூங்கில்முள்ளால் வளைக்கப்பட்ட வேலியையுடைய மரம்பயின்ற செறிந்த சோலையில் தேவருறைதற்கொத்த பூப்பொருந்தியதொருபக்கத்தே பட்டினப்பாக்கத்து * வான்பெருமன்றத்திப் பிண்டிநீழற்கண்ணே உலகநோன்பிகளிடப்பட்ட சிலாதலத்தின்மேலிருந்தருளிப் பெருமகற்செய்யப்பட்ட அதிசயங்கள்மூன்றும் தப்பாத ஆகமநூலின் உண்மைத்தன்மையையுடைய தருமவொழுக்கத்தை யாவருங்கேட்கும்படி அருளிச்செய்யும் † சாரணர் அப்பட்டினப்பாக்கத்தைவிட்டு நீங்கிவந்து தோன்றவென்க.

அதிசயமூன்றுவன : சகசாதிசயம், கர்மக்ஷயாதிசயம், தெய்வீகாதிசயமென்பன.

வேறுகி உடுத்த ஒருசிறைச் சாரணர்தோன்றவென்க.

(கு - பு.) [ஆற்றுவீயரங்கம் - ஆற்றைமறைக்கும் அரங்கம்; ஆவது-குறை; அது சீரங்கம். ஆற்றவியென்பாருமுளர். அடுக்கம் - மரச்செறிவு; அரங்கத்துக்கு அடுத்த இடம். முன்பு சொன்ன சாரணர்தோன்ற. ஐயர்-முன்சொன்ன உலக நோன்பிகள். ஐயர்பட்டினப்பாக்கத்திலிட்ட சிலாதலத்து இருந்து தருமஞ்சாற்றுதல் சாரணர்க்கு அடையாக்கி, அவர் இங்கே தோன்றவென்க.] அரங்கம் - ரங்கம்; யாற்றிடைக்குறை.

கசுசு-கசுக. பண்டைத் தொல்வினை பாறுக வென்றே
கண்டறி கவுர் தியொடு காலுற வீழ்ந்தோர்
வந்த காரணம் வயங்கிய கொள்கைச்
சிந்தை விளக்கிற் றெரிந்தோ ருயினு
மார்வமுஞ் செற்றமு மகல நீக்கிய
வீர ரகலின் விழுமங் கொள்ளான்

இ - ள். முன்செய்த பழவினையெல்லாம் கெட்டோடுவதாகவென்றுஉட்கொண்டு அவர்வந்தமையைக் கண்டறிந்த கவுந்தியடிகளுடனே சென்று அவரடியிலே தலையுறவீழ்ந்தார்; அங்ஙனம் விழுந்தவர் இங்குவந்ததனது விளங்கிய கோட்பாட்டையுடைய ‡ அவதிஞானத்தால் தெரிந்தவ

---

* வான்பெருமன்றமென்பது முதலாக இங்கே தந்துரைத்தவற்றை, இக்காதை உ0-ம் அடிமுதலியவற்றிற் காண்க.

† சாரணர் - சமணமுனிவர். அவர், தலசாரணர் சலசாரணர் பலசாரணர் புட்பசாரணர் தந்துசாரணர் சதுரங்குலசாரணர் சங்கசாரணர் ஆகாசசாரணரென எண்வகையர். இவ்விருவராகச்சென்று தருமோபதேசஞ் செய்தல் அவர்கட்கு இயல்பென்பர்.

‡ அவதிஞானம் - தன்னுடைய அதீதகதமான பரிஞ்ஞானம்; அஃதாவது முற்பிறப்பையறியுமறிவு.

றையிலும் ஆர்வமும் செற்றமும் தன்னை விட்டுப்போம்படி நீக்கிய * வீரரை களிலே இவர்க்கு வருந்தினபத்திற்குத் தான் வருந்தாளாகியென்க.

கண்டறிகவந்தியென்பதனாலும் † காலவுணர்ச்சியின்மையுணர்க. ஓடு-ஒருவினையொடு.

(கு - பு.) [சிந்தை வினைக்கு - அவதிஞானம்; என்றது, திரிகாலஞானத்தை] ஆர்வம் - அன்பு. செற்றம - பகைமை. விழுமம்-துன்பம்; உரிச் சொல்; "விழுமஞ்சீர்மையுறு சிறப்பு மீடும்மையும்" என்றார் ஆசிரியர்தொல்காப்பியனார்.

கஎo - கஎக. கழிபெருஞ் சிறப்பிற் கவுந்தி காணை
யெழுதிகென வெழுதியா தூட்டுமவ் வினை

இ - ள். மிக்க பெரிய தவச்சிறப்பையுடைய கவுந்தி, யாவராலும் ஒழிக்க வொழியாததாய் நுகர்விக்க வந்தமிருகினை தீவினையைக் காணை யென்றுரையினாள்.

† காணைய - பாராய். ஒழிகெனவெழியாதெனபதற்கு, ‡ 'உரிய தன்றிங் கொழிக' எனவும் ஒழியாது ஊட்டுந் தீவினையையெனினுமமையும்.

கஎஉ-கஎசு. இட்ட வித்து மெறிந்தவுங் தெய்தி
யெட்டுங் காலை யெழுக்கவு மொன்ணை

இ - ள். விளை நிலத்திட்ட வித்தும்போலப் பயனெதிர்ந்து கண்கூடாக நல்வினைவந்து நுகர்விக்குங்காலத்தும் ஒழிக்கவொண்ணை; அதுபோல இதவும ஒழிக்கவொழியாதென்றுரையினாள்.

§ "உறற்பால.....பாரு மில்" எனறுரைகளின். தீவினைதன்னையே கூறினுமமையும். உம்மை - எச்சவுமையும.

(கு - பு.) "உறற்பால" என்னும் காலிடையார் பேற்றேகாளுக்கு-ஊழ்வினையால நேரிடத்தக்க துன்பங்கள் ஆற்றல் மிகுந்தமுனிவர்களுக்கும் விலக்கக்கூடாதனவாம், விடறத்தக்க தன்மையையுடைய அவ்வின்பங்களும் அப்படிப்பட்டனவாகும், எனைபோலவெனின், மழை பெய்யாதாயின் அதனை வருவிக்கவல்லவருமில்லை, மும் மழை மிகுதியாகப்பெய்தால் அதனைக்குறை

---

* வந்தசாபனரிருவருள், உடனேதெளிந்தோர் மூத்தோரேயாதலின், வீரரென்னை ஒருமையாற்கூறினர்.

† 'காலவுணர்ச்சியின்மையுணர்க' என்றது, [ருரு - ம் அடி] 'உரிய தன்றிங் கொழிகெனா வெழியாதீர்' என்பதனை உளப்படுத்துக்கூறியவாறு வற்புறுத்தற்பொருட்டு.

‡ காலுக்காணை காணை, ருரு.

§ காலிடையார், படுவினை, சு: "உறற்பால கீக்க லுறுவர்க்கு மாகா, மிறற்பா லெனைபயு மன்னவா மாரி, யுறப்பெரிற் றருவா ருமில்லை யதனைச், சிறப்பிற் றணிப்பா ருமில்லை."

யச்செய்பவர்களுமில்லை என்பதுபொருள் ; எல்லாம் பழவினையின்படியே நடக்குமென்பது கருத்து.

களை- சஎஅ. கடுங்கா னெடுவெளி யிடுஞ்சுட ரென்ன
வொருங்குட னில்லா வுடம்பிடை யுயிர்கள்

இ - ள். கடியகாற்றையுடைய நெடிய வெளியில் இடப்பட்ட விளக்கென்னும்படி மாயினல்லதுகூடியுடனில்லா, உடம்பினின்ற உயிர்களுமென்றுரைன்க.

நல்வினை தீவினைப்பயனுகிய இன்பமுந் துன்பமும் வருங்கால் யாவராலும் ஒழிக்கவொண்ணுவென்பதூஉம், யாக்கைநிலையாமையும் இவர்தம்பால் உறுவது கண்டு கவுந்தியடிகட்குச் சாரணர்கூறினரெனவுணர்க. விளக்கு உவமித்தார் ; நினைவறஅழிவதற்கும், புக்குழிப் புலப்படாமைக்கும்.

களை - ககூக. அறிவ னறவோன்.....பொதியறை யோரென

களை. அறிவன் — இ - ள். எல்லாப்பொருளையுமறியும் அறிவையுடையோன்,

களை. அறவோன்—இ - ள். அறஞ்செய்தலையே தொழிலாகவுடையோன்,

களை. அறிவுவரம் பிகந்தோன்—இ - ள். யாவருமறியப்படும் அறிவெல்லையைக் கடந்தோன்.

களள. செறிவன்—இ - ள். எல்லாவுயிர்கட்கும் இதணையுள்ளவன் ; சமியாதவனென்றுமாம்.

களள. சினேந்திரன்—இ - ள். என்வகைக் கன்மங்களையும் சயித்தவன்.

அவையாவன : * ஞானவரணீயம், தரிசனவரணீயம், வேதநீயம், மோகநீயம், ஆயுஷ்யம், நாமம், கோத்திரம். அந்தராயமெனவிவை.

களள. சித்தன்—இ - ள். கிருதகிருத்தியன் = செய்யப்படுவனவற்றைச் செய்துமுடித்தவன்,

கருமங்களைக் கழுவினவனுமெனபர்.

களள. பகவன்—இ - ள். † கேவலஞானி.

களஅ. தரும முதல்வன்—இ - ள். தருமங்களுக்கு அடியாயுள்ளவன,

களஅ. தலைவன்—இ - ள். எல்லாத்தேவர்க்கும் தலைவனுக என்னைப்பட்டவன்,

---

* ஞானவரணீயமுதலியவெட்டும் காதி அகாதியென இருவகைப்பட்டு, களசஅ - ஆக விரியு மென்பர்.

† கேவலஞானம் - ஐந்து ஞானத்துள்ளுஞ்சிறந்தது. ஐந்து ஞானங்களாவன : க. மதிஞானம்—சுவபாவபுத்தி ; உ. சுருதஞானம்=நூலுணர்ச்சி ; ங. அவதிஞானம்=தன்னுடைய முற்பிறப்பையறியுமறிவு ; சு. மனப்பாரியயஞானம்=தன்னுடைய முற்பிறப்பையும் பிறருடைய முற்பிறப்பையுமறியுமறிவு ; ஞ. கேவலஞானம்=திரிகாலவுணர்ச்சி.

களஅ. தருமன்—இ - ள். தருமந்தானையுள்ளவன்,

களக. பொருளன்—இ - ள். ஆகமத்தின் பொருளாயுள்ளவன் ; உண்மைப்பொருளாயுள்ளவனெனவுமாம்.

களக. புனிதன்—இ - ள். சுத்தன் ; புதியவனுமென்பர்.

களக. புராணன்—இ - ள். பழையவன்,

களக. புலவன்—இ - ள். எல்லார்க்கும் அறிவாயுள்ளவன்,

கஅ0. சினவரன்—இ - ள். சினத்தைக் கீழ்ப்படுத்தியவன்,

கஅ0. தேவன்—இ - ள். தேவர்களுக்கு ஆதியாகிய தேவன்,

கஅ0. சிவகதி நாயகன்—இ - ள். வீட்டுலகிற்கு நாயகனையுள்ளவன்,

கஅக. பரமன்—இ - ள். மேலானவன்.

கஅக. குணவதன்—இ - ள். குணத்தையுடையவன் ; வதம்-* விரதமுமாம்.

கஅக. பரத்தி லொளியோன்—இ - ள். மேலாய உலகிற்கு விளக்காயுள்ளவன்,

கஅஉ. தத்துவன்—இ - ள். தத்துவங்களையுடையோன்,

கஅஉ. சாதுவன்—இ - ள். ஒடுங்கினவன்,

கஅஉ. சாரணன்—இ - ள். ஆகாசவாசி,

கஅஉ. காரணன்—இ - ள். எல்லாவற்றிற்கும் காரணமாயுள்ளவன்=காரணபூதன்.

கஅங. சித்தன்—இ - ள். என்வகைச் சித்திகளையுமுண்டாக்கினவன்,

(கு - பு.) என்வகைச்சித்திகள் - அணிமா, மகிமா, கரிமா, லகிமா, பிராப்தி, பிரகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என இவை.

கஅங. பெரியவன்—இ - ள். எல்லாவற்றிலும் பெரியவன்,

கஅங. செம்மல்—இ - ள். நாயகமூர்த்தி,

கஅங. திகழொளி—இ - ள். விளங்கும் ஒளியாயுள்ளவன்,

கஅச. இறைவன்—இ - ள். எப்பொருளிலும் † தங்குகின்றவன்,

கஅச. குரவன்—இ - ள். குருமூர்த்தியாயுள்ளவன்,

கஅச. இயல்குணன்—இ - ள். இயல்பையே குணமாகவுடையவன்,

கஅச. எங்கோன்—இ - ள். எம்முடையசுவாமி,

கஅஞ. குறைவில் புகழோன்—இ - ள். நிறைந்த புகழையுடையோன்,

கஅஞ. குணப்பெருங் கோமான்—இ - ள். குணங்களைச் சம்பத்தாகவுடையவன்,

---

* விரதம் - அணுவிரதம், குணவிரதம சிக்ஷாவிரதமென மூன்றுவகைப்படும் ; அவற்றுள், குணவிரதம் - திக்குவிரதம், தேகவிரதம், அநர்த்ததண்டவிரதமென மூன்றுவகைப்படும்.

† இறுத்தல் - தங்குதல்.

கஅசு. சங்கரன்—இ - ள். சுகத்தைத்தப்பண்ணுகிறவன்.

கஅசு. ஈசன்—இ - ள். ஐசுவரியவான்,

கஅசு. சயம்பு—இ - ள். தானே தோன்றினவன்,

கஅசு. சதுமுகன்—இ - ள். நான்குமுகன்,

கஅஎ. அங்கம் பயந்தோன்—இ - ள். * அங்காகமத்தை யுன்டாக்கினவன.

கஅஎ. அருகன்—இ - ள். பூச்சியன்,

கஅஎ. அருன்முனி—இ - ள். சிவபரமூர்த்தி,

கஅஅ. பன்னவன்—இ - ள். கடவுள்,

கஅஅ. எண்குணன்—இ - ள். எட்டிக்குணங்களையுடையோன்.

எண்குணமாவன ; அநந்தஞானம், அநந்தவீரியம், அநந்ததரிசனம், அநந்தசுகம், நிர்நாமம், நிர்க்கோத்திரம், நிராயுஷ்யம், நிர்நாசமெனவிவை.

(கு - பு.) [எண்குணமென்றது அநந்த ஞானம், அநந்ததரிசனம், அநந்தவீரியம், அநந்தசுகம், அநந்தநாமம், நிட்களம், நிராயுஷ்யம், சத்பாவித்வ எனஇவை.]

கஅஅ. பாத்தில் பழம்பொருள்—இ - ள். பகுத்தற்கரிய புராணப் பொருளாயுள்ளவன் ; ஒட்டமற்ற பொன்போலெயொப்பானென்றுமாம்.

கஅக. விண்ணவன்—இ - ள். சுவர்க்கவாசி,

கஅக. வேத முதல்வன்—இ - ள். † ஆகமமூன்றிற்கும் முதலாயுள்ளவன்,

கஅகூ. விளங்கொளி—இ - ள். அஞ்ஞானவிருணீங்க விளங்குமொளி.

கஙo - கஙக. ஓதிய வேதத் தொளியுறி னல்லது
போதார் பிறவிப் பொதியறை யோரெ

இ - ள். இந்நாமங்களையுடையோரல்லாதப்பட்ட ஆகமமாகியவிளக் கொளியைப் பெற்றுற் போந்தேதறினல்லது யாவரும் பிறவியாகிய சிறையி னின்றும் போகமாட்டாரென்றுரைக்க.

பொதியறை - துவாரமில்லாத கீழறை.

---

* அங்காகமம், கஉ பகுப்புடைத்து. அவைவருமாறு :—க. ஆசாராங் கம், உ. சூத்திரகிருதாங்கம், ங. ஸ்தாணாங்கம், ச. ஸமவாயாங்கம், ஞ. வியாக்கியாப்பிரஜ்ஞப்த்யங்கம், சு. ஞாத்ருகதாங்கம், எ. உபாஸகாத்தி யயாங்கம், அ. அந்தக்கிருத்தசாங்கம், கூ. அநுத்தரோபபாதிகதசாங்கம், கo. பிரச்சிநவியாகரணாங்கம், கக. விபாகசூத்திராங்கம், கஉ. திருஷ்டிவா தாங்கம்.

† ஆகமமூன்றுவன : அங்காகமம், பூர்வாகமம், பகுசுருதியாகம மென்பன.

ககஉ - ககஙூ. சாணைர் வாய்மொழி கேட்டுத் தவமுதற்
காவுந் தியுந்தன் கைதலை மேற்கொண்டு

இ - ள். அங்ஙனம் சாணாருளிக்செய்த பெருமையமைந்த உண்மை மொழியைக் கேட்டுத் தவத்திற்கு முதல்வியாகிய கவுந்தியடிகளும் தமது ககளின்த் தலைமேல்வைத்துக்கொண்டு நின்று கூறுவார் :—

ககஎ - ககஙு. ஒருமூன் றவித்தோ தேதிய ஞானத்
திருமொழிக் கல்லதென் செவியகந் திறவா

இ - ள். எனதுசெவிகள் காமவெகுளிமயக்கங்களைக் கெடுத்தவறு லோதப்பட்ட ஞானபாதமாகியதிருமொழியைக்கேட்டற்குத் திறப்பினல்ல தறிதென்றற்குத் திறப்பனவல்லவென்றுரைக்க.

அவித்தல் - அடக்குதலுமாம்.

ககஎ - ககள. காமனை வென்றோ ரையிரத் தெட்டு
நாம மல்லது ஈவிலா தென்ற

இ - ள். என் நாவும் காமன்செயலை வென்றவனுடைய ஆயிரத்தெட்டு வகைப்பட்ட நாமத்தைச் சொல்லினல்லது பிறிதென்றனைச் சொல்லா தென்றுரைக்க.

ககஅ - ககஙூ. ஐவரை வென்றோ னெடியினை யல்லது
கைவரைக் காணினுங் காண வென்கண்

இ - ள். எனதுகண்களும் ஐவகைப்பட்ட இந்திரியங்களையும் வென்ற வனுடைய அடியினைகளைக் காணினல்லது பிறிதொருதெவடியினைகளைக் கையகத்தேகாணினும் காணவென்றுரைக்க.

ஐவர் - செறலின்கண் திணைமயக்கம். இனிக் கைவரைகாணினும் என்றுபாடமாயின், கைவரைகாணல் - கண்விழித்தலாக்கி, விழித்திருப் பினும் காணவென்க.

(கு - டு.) [ஐவர்-பஞ்ச இந்திரியங்கள்.] இது, கோபம்பற்றிவந்ததினை வழுவமைதி. அடியினை - உபய பாதம்.

உoo - உoக. அருளறம் பூண்டோன் றிருமெய்க் கல்லதென்
பொருளில் யாக்கை பூமியிற் பொருந்தாது

இ - ள். எனது பயனற்ற உடம்பு அருளால் அறத்தைப்பூண்டோனு டைய திருமேனிப்பொருட்டுப் பூமியிற்பொருந்தினல்லது பிறிதொன்றற் குப் பொருந்தாதென்றுரைக்க.

அருளறம் - உம்மைத்தொகையுமாம்.

(கு - டு.) யாக்கை பூமியிற் பொருந்துதல் - தண்டனிடுதல்.

உoஉ - உoங. அருகாறவ னறிவோற் கல்லதெ
னிருகையுங் கூடி யொருவழிக் குவியா

இ - ள், எனது இருகையும் அருகர்க்கு அறத்தைக்கூறுவோரூகிய அறிவன்பொருட்டு என்கிரத்தின்மிசையே குவியினல்லது பிறிதொரு தேவர்பொருட்டுக் குவியாவென்றூரைன்க.

அருகர் - இருடிகள்.

உ0ச - உ0ஞ. மலர்மிசை நடந்த மலரடி யல்லதென்
றலைமிசை யுச்சி தானணிப் பொறுஅது

இ - ள். எனது தலையினுச்சியும் பூவின்மீதேநடந்த மலரடியாகிய அணியை அணியப் பொறுப்பினல்லது பிறிதொன்றனையும் அணியப் பொறுதென்றூரைன்க.

(கு - பு.) [தலையிடத்து.] அருகக்கடவுள் நாமரைமலரை வாகனமாக்கொண்டு அதனை ஊர்ந்து சென்றன ரென்று ஜைனநூல் சொல்லும்.

உ0சு - உ0எ. இறுதியி னின்பத் திறைமொழி யல்லது
மறுதர வோதியென் மனம்புடை பெயராது

இ - ன். என்மனமும் ஈறில்லின்பமாகிய அநந்தசுகத்தையுடைய இறைவனருளிச்செய்த ஆகமமாகியமொழியை உருவேற ஓதிப் புடைபெயரினல்லது பிறிதொருமொழியையோதிப் புடைபெயராதென்றூரைன்க.

மறுதர - மீளவும்.

உ0அ - உகஞ. என்றவ ணிசைமொழி யேத்தக் கேட்டதற்
கொன்றிய மாதவ ருயர்மிசை யோங்கி
நிவந்தாங் கொருழுழ நீணில நீங்கிப்
பவந்தரு பாசங் கவுந்தி கெடுகென்
றந்தர மாறுப் படர்வோர்த் தொழுது
பந்த மறுகெனப் பணிந்தனர் போந்து

இ - ள். தம்கையைத் தலைமேற்கொண்டு நின்று, கவுந்தியடிகள் (ககஞ) நிறவா ; (ககூஎ) நவிலாது ; (கஙங) காண ; (உ0க) பொருந்தாது ; (உ0ஙூ) குவியா ; (உ0ஞ) பொறுஅது; (உ0எ) பெயராது என்றுகொண்டு அவன்புகழ்மொழிகளை ஏத்தக்கேட்டு அதற்குப் பொருந்தியசாரணர் அவ்விடத்திடப்பட்ட சிலாவட்டத்தினின்றுமெழுந்து அதற்கு ஒருமுழவுயரம் மேலாகின்று பிறப்பைத்தரும்பாசம் கவுந்திக்குக் கெடுவதாகவென்றுகூறி அந்தரவழியாக விரைந்துசெல்லுகின்றவரைநோக்கித் தொழுது பாசங்கள் அறுகவென்று பணிந்தனராய்ப்போந்தென்க.

(கு - பு.) [உயர்மிசை - சிலாவட்டம். ஓங்கி - எழுந்திருந்து. பந்தம்-ஸம்ஸாரம்.]

உகச - உகஅ. காரணி பூம்பொழிற் காவிரிப் பேரியாற்று
நீரணி மாடத்தி னெடுந்துறை போகி
மாதருங் கணவனு மாதவத் தாட்டியும்

தீதுதீர் நியமத் தென்கரை யெய்திப்
போதுசூழ் கிடக்கையோர் பூம்பொழி லிருந்தெழி

இ - ள். முகிலெயணிந்த அழகியபொழிலையுடைய காவிரியாகிய பெரிய யாற்றிற்கு மாதருங் கணவனும் கவுந்தியடிகளும் பள்ளியோடத்தேறிப் போய்த் தென்கரையைச்சென்றடைந்து மலர்கள்சூழ்ந்துகிடக்கின்றதோர் பொலிவினையுடைய சோலையிடத்தே சென்றிருந்தபொழுதிலென்க.

(கு - பு.) [கோணிமாடம் - பள்ளியோடம்.]

உகக - உஉo. வம்பப் பாத்தை வறுமொழி யாளனெடு
கொங்கலர் பூம்பொழிற் குறுகினர் சென்றோர்

இ - ள். * இடங்கழிகாமத்தளாகிய குண்டக்கணிகையொருத்தி ஒரு வனேடுங்கூடி இவர்களிருக்கின்ற பணம்பாந்தோர் அழகிய பொழி லிடத்தே அணுகினராய்ச்சென்றவரென்க.

வம்பப்பாத்தை - புதிய பாத்தைத்தன்மையையுடையாள்; குண்ட னென்றடி. இனி மனைவெழுச்சியால் தோன்றினபடி சொல்லித்திரியும் பா த்தையென்றுமாம். வறுமொழியாளன் - பயனில்சொல்லாளன்; விடனென் றபடி.

உஉக - உஉஉ. காமனுந் தேவியும் போலு மீங்கிவ
ராரெனக் கேட்டீங் கறிகுவ மெனறே

இ - ள். இவ்விடத்துவந்திருக்கின்ற காமனையும் இரதியையுமொ க்குமிவர்களையாரென்றுகேட்டு அறியக்கடவோமென்று சொல்லியென்க.

இனி இவ்விடத்துவந்த இவர் காமனும் தேவியுமே ; அல்லராயின், யாரெனக் கேட்டறிகுவமென்றுரைனினுமமையும். இப்பொருட்குப் போலி, ஒப்பில்போலி. ஈங்கிவர், ஈங்கு - இவ்விடத்து. கேட்டீங்கு, ஈங்கு - இப் பொழுது.

உஉங-உஉச. நோற்றுணல் யாக்கை நொகிதவத் தீருட
னூற்று வழிப்பட்டோ ராரென வினவ

இ - ள். † உவாமுதலிய விரதங்களிற் பட்டினிவிட்டுண்டலால் மெலிந்த உடம்பையும் நுண்ணிய தவத்தையு முடையீர், நும்மொடுகூடி வழிவந்தவிவர் யார்தானென்று வினவவென்க.

---

* இடங்கழிகாமம் -மிக்ககாமம்; "இடங்கழி காமமொ டடங்கா வுள்ள, யுடம்போ டென்ற வுள்ளகம் புகுந்தென், நெஞ்சங் கவர்ந்த வஞ்சக் கள் வி" என்றார் மணிமேகலையிலும்; கஅ - வது உதயதுமான் அம்பலமீடுக்க காதை. "இடங்கழி யாளர் தொடர்பின்ற" என்று இன்னுநாற்ப திலும் கூறியிருத்தல் காண்க.

† "ஓவா திரண்டுவவு மட்டமியும் பட்டினிவிட்டு" என்றார் சிந்தாமணி யிலும்; கேமசரியாரிலம்பகம், கருசு.

ஆற்றுவழிப்பட்டோர் - வழியிற் கூடிவந்தோர்.

(கு - பு.) உவா - பதினைந்தாந்திதி ; அமாவாசியையும், பூர்ணிமையும். முதலிய என்றதனை, அஷ்டமி, சதுர்த்தசி முதலியவற்றை.

உஉசு-உஉசூ. என், மக்கள் காணீர் மானிட யாக்கையர்
பக்க மீங்குமின் பரிபுலம் பினரென

இ - ள். அவ்விருவருந் இவ்விரவரையும் வினவுதல்கண்ட கவுந்தியடிகள் இவர் எனமக்கள்காணும் ; நீர்சென்ன காரணம் தேவிபுமலர் ; மானிடயாக்கையர் ; வழிவருதலாலாகிய வருத்தத்தால் மிகவும் வருந்தினர் ; அவரிடஞ்செல்லாதே விடப்போமினென்றுரைன்க.

* பரி - மிகுதி ; ஒருசொல்லுமாம்.

(கு - பு.) பரி - வடமொழி உபசர்க்கம் ; மிகுதிப் பொருளைதரும் இடைச்சொல். அது, புலம்பினரெனலுந் தமிழ்மொழியொடுதைக்கும் ; "அதிநுட்பம்" என்றற்போல. [பரி புலம்பினர் - செலவால் வருந்தினர்.] மக்கள் என்றது, அன்புபற்றி ; மாபுவழுவமைதி.

உஉஎ-உஉஅ. உடன் வயிற் றோர்க ளொருங்குடன் வாழ்க்கை
கடவது முண்டோ கற்றறிந் தீரென

இ - ள். நூல்களினுங்கற்ற அதன்பயனையுமறிந்தவரே, ஒருவயிற்றுப் பிறந்தோர் கொழுநனும் மனைவியுமாய்க் கூடிவாழுக்கடவதென்று நீர்கற்ற நூல்களிற் சொல்லிக்கிடப்பதுமுண்டோ ? உண்டாகிற் சொல்லுமென்றுரைன்க.

கற்றறிந்தீரென்றது இகழ்ச்சி. இவ்வாறோ நீர் கற்றனவுமெனடதாம.

(கு - பு.) உடன்வயிற்றோர்கள் - சகோதரர். கீழ் "எனபக்கள்" என்றதன்மேல் இவ்வாறு ஆசங்கூடித்தார்கள்.

உஉக - உசo. தீமொழி கேட்டுச் செவியகம் புதைத்துக்
காதலன் முன்னர்க் கண்ணகி நடுங்க
வெள்ளநர் போலுமிவ ரெனபூங் கோதை
முள்ளுரைடக் காட்டின் முதுநரி யாங்கெனக்
கவுந்தி யிட்ட தவந்தரு சாபங்
கட்டிய தாதலிற் பட்டதை யறியார்
குறுநரி நெடுங்குரற் கூவிளி கேட்டும்
நறுமலர்க் கோதையு நம்பியு நடுங்கி
நெறியி னீங்கியோர் நீரல கூறினு
மறியா மையென் றறியல் வேண்டுந்
செய்தவத் தீர்நுந் திருமுன் பிழைத்தோர்க்
குய்திக் காலமுரையீ ரோவென

---

* "பரிபுலம் பினனிவன், றூனை தமியன் வந்தனன்" என்றார் மணிமேகலையிலும் ; சசு - வது ஆசிரைபிசீசையிட்டகாதை.

இ - ள். இங்ஙனம் இவரிகழ்ந்தமொழியைக் கேட்டலாற் செவியைப் புதைத்துக் கணவன் முன்னிலையில் கண்ணகி நடுங்க, என்பூங்கோதை போல்வாளை இவரிகழ்ந்தனர், இவ்விகழ்ச்சியால் தடக்குமுட்களையுடைய காட்டில் நுழைந்திரியும் முதுகரியாகக்கடவனெனக் கவுந்தியடிகளிட் சாபம் தவத்தினளவாகிய சாபமாதலால் அவளைச்சென்று பூண்ட தாதலின், அங்ஙனம் விளைந்தபடியை அறியாராகிய கோவலனும் கண்ணகியும் குறியகரியினது மெய்யகுமாலாகக்கூவும் வினியைக்கேட்டு நடுங்கிச்சென்று ஏழுக்க மெறியினின்றும் நீங்கியோர் நிர்மையல்லாதனவற்றைச் சொல் லினும் இவரது அவர் அறிவின்மையாற் கூறியதன்றேயுலகென்று உயர்ந்தோர் தமதறிவால் உணரவுரைக்கும்; செப்பவந்தீர், உம்முடைய திருமுன் பிழை த்த இவர்க்கு இனிச் சாப நீங்கி உய்தலுண்டாங்காலத்தை உரைத்த நுமி லென்றுகூறலென்க.

போழும் - ஓப்பில்போலியுமப்பொருட்டாகும். முதுகரி - தூரி. நடுக்கியென்றார்; தம் மொருட்டாகவிவ்வாறாதலின். ஓகாரம் - இசைநிறை. அடிகள் மனத்தானி னத்து இட்டசாப மாதலாற் படட்டதையறியாரென்றார். இங்ஙனம் அறி யாது இவர்கள் சொன்ன இகழ்ச்சியாலும் இதற்கு இவரல்லது வேறு சபிக் கவரிபாரின்மையாலும் உய்திக்காலமுணர்பிலரென்றார். வினி - ஓலிக்குரல். 'நெறியி னீங்கியோர் நீலை கூறியது, மறியா மையென் றறிதல் வேண்டும்' என்னுர்த்துணையும் அவருட்கோள். பின்னதை அடிகட்குக் கூறினர்.

(கு - பு) [பட்டதை அறியார் - மனத்தில் இவர் நினைத்ததாதலால் அறிந்திலர். பின்பு அறிந்தபடி: அவர்கள் முன்னேரியானபடியாலும், தங்களைப் பொல்லாங்கு கூறினமையாலும், அவ்விடத்து இவரல்லது வேறு சாபமிடவல்லாரில்லையாகலானும், இச்சாபம் இவராலே வந்ததென்று இவரறிந்தார்; அறிந்து (உசo) உய்திக்காலம் உரையீரோவென்றார்.] உய்திக்காலம்- சாபநிவர்த்திகாலம். "ஓப்பில்போலியுமப்பொருட்டாகும்" என்றவிதியால, போழுமென்பது இங்கு உரையசைப்பொருளதாய் நின் றது. உட்கோள் - மனத்திற்கருதியது.

உசக- உசஞ. அறியா மையினின் றிழிபிறப் புற்றோர்
நுறையூர் நொச்சி யொருபுடை யொதுங்கிப்
பன்னிரு மதியம் படர்தோ யுழந்தபின்
முன்னை யுருவம் பெறுகவீங் கிவரெனச்
சாபவிடை செய்த

இ - ள். தமது மூப்பொறிகளால் வரும் தின்பமென்பதனை அறிந்து கூறுமையாலே இன்று இழிபிறப்பையுற்றவிவர் உறையூர் மதிற்புறமாகிய காவற்காட்டில் திரிந்து பன்னிரண்டு மாதம் இங்ஙனந் தின்பமனுபவித்த பின்னர் முன்னைப்பிறப்பைப் பெறுவாராகவெனச் சாபவிடைசெய்தென்க.

இன்று இறுபிறப்புற்றேனென்றது நெடுங்காலம் தவஞ்செய்துபெற்ற மக்கட்பிறப்பை ஒருவார்த்தையினிழந்து இறுபிறப்புற்றேனென்றவாறு. எனவே * யாகாவாராயினும் நாகாத்தல்வேண்டுமென்பதாயிற்று. நொச்சியொருபுடையென்றது அரண்வேண்டாமை விளக்கிற்று; † "நொச்சி வேலித் திந்த ணுறந்தை" என்றதுமது. இறுபிறப்பு - விலங்கின்பிறப்பு. முன்னையுருவம் - வம்பப்படத்தையும் வறுமொழியாளனுமெனவுமாம்.

(கு - பு.) முப்பொறி - திரிகரணம்; மனமொழிமெய்கள். சாந்திரமான சம்பந்தத்தால் மதிவெயன்றுந் திங்களென்றும் மாதத்திற்குப்பெயர். [படர்நோய் - உறழ்ச்சியாலுண்டானநோய்.] சாபவிடை - சாபவிர்த்தி. யாகாவாராயினும் - தம்மாறகாக்கப்படுவனவெல்லாவற்றையுங் காக்கமாட்டாராயினும். நாகாத்தல் - நாவெனாற்றையும் அடக்குதல்.

உசுரு - உசுஅ.

தவப்பிறருஞ் சிறப்பிற்
காவுந் தியையுந் தேவிபுங் கணவனு
முறஞ்சுசவி வாரண முஞ்சம முருக்கிய
புறஞ்சிறை வாரணம் புக்கனர் புரிந்தெதிர

இ - ள். தவத்தாண்மிக்க சிறப்பையுடைய காவுந்தியழகளுந் தேவியும் கணவனும் முறம்போலுஞ்செவியையுடைய யானைபைச சமரிடத்துக் கெடுத்த புறத்தேசிறையையுடைய கோழியென்னுங்கரிக்கன்னமென விருபத்தோடு புக்கானென்க.

---

* திருக்குறள், அடக்கமுடைமை, எ: "யாகாவா ராயினு நாகாக்க காவாக்காற், சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு"

† அகநானூறு, மணிமிடைபவளம் கஉக: "இரும்பிழிமகாரிவ் வழுங்கற்ஞ் மூதூர், விழவின் முயினுங் குஞ்சா தாகு.மல்லலாவணமறுகுடன்பழியின், வல் லுரைக் கடுஞ்சொ லன்னை தெருட்சாள், பிணிகோ ளருஞ்சிறையன்னை தெருட்சாது, றுஞ்சாச் கண்ணார் காவலர் கடுகுவ, ரிலங்குமே யம்னாளூர் தஞ்சிலம் வையபிற்று, வலஞ்சுரி தோகை ஞாளி மகிழு, மரவவாய் குமவி மகிழாது மழியிற், பகலுறழ் நிலவுக் கான்று விசும்பி, னகல்வாய் மண்டிலை நின்றுவிரியுமே, திங்கள்கல் சேர்பு கனையிருண்ட மடியி, னில்லெரி வல்சி வல்வாய்க் கூகை, கழுதுவழங் கியாமத் தழிதகக் குழறும், வனைக்கட் சேவல் வாளாது மடியின், மனைச்செறி கோழி மான்குர லியம்பு, மெல்லா மடிந்த காலையாருநா, னில்லா நெஞ்சத் தவர்வா லலரே, யதனு, லரிபெய் புட்டிலார்ப்பப் பரிசிறந், தாதி போகிய பாய்பரி நன்மா, னெய்ச்சி வேலித் திந்த னுறந்தைக், கயன்முதிர் புறங்காட் டன்னை, பன்முட்டினதாற் றுழிஞங் களவே" என்பது, தலைமகன் சிறைப்புறத்தானுரைத் தோழிக்குச் சொல்லுவானாய்த் தலைமகள் சொல்லியது; பரணர்.

வாரணம் - கோழியூர்; ஆவது உறையூர். முற்காலத்து ஓர்கோழி யாஅனையைப் போர்தொலைத்தலான் அந்நிலத்திற்செய்த நகர்க்குக் கோழியென்பது பெயராயிற்று. அந்நகர் கான்கின்றபொழுது சிறையும் கழுத்துமாக ஆக்கியவதனைற் புறம்பே சிறையையுடைய கோழியென்றுயிற்றென்பாருமுளர். அற்றன்று; புறஞ்சிறைவாரணமென்பது சிலேடை: புறத்தே சிறையையுடையகோழியும், புறஞ்சேரியையுடைய உறையூரும்; *"புறஞ்சிறைப்பெரும்பாழில்" என்பதனுள்ளவாறுகண். புறஞ்சிறைவாரணம் - கோழியூரெனக்கொள்க.

(கு - பு.) [பூதம் - தனகு. வாரணம் - யானை. வாரணம் - கோழி; புறத்தேசிறையையுடைய சேரி - உறையூர்; கோழி - ஆகுபெயர். யானையைக் கோழி மூக்கலால் கோறியென்று பெயராயிற்று. யானையைச் சயித்தகோழி தோன்றினவிடம் வயிடைத்தென்று கருதி அவ்விடத்து அதன் பெயராலே சோழன் ஊர்கண்கின்றபொழுது சிறையுங்கழுத்துமாக்கிய வதனால் புறம்பே சிறையையுடைய கோழியென்றுயிற்று.] "புறஞ்சிறைப்பெரும்பாழில்" என்பதற்கு - புறஞ்சேரியிடத்திலுள்ளனவாகிய சோலைகளென்று பொருள். எனை - ஈற்றசை.

(உகஉ) பணிக்தனர்போற்றி (உகஎ) எய்தி (உகஅ) இருந்துழிச் (உஉ0) சென்றோர் (உஉச) வினவப் (உஉசு)) பரிபுலம்பினரெனக் (உஉஅ) கடவுள் முன்டோ கற்றறிந்திலமெனச் (உஉசு) செவிபகம்புதைத்து (உசு0) நடுங்க (உசு஫) முதுராயிரப்பாக்கனைக் (உசுச) கட்டிபதாதலின், (உச0) உரையீரோவெனப் (உசுசு) பிறழ்க நங்கிவரெனச் (உசுரு) சாபவிடை செய்து (உசுசு) கவுந்தியும் தேவியும் கனைவனுய (உசுஅ) புரிந்துபுக்கா ரென்க.

இதனு, எல்லாவழியும் தம்முளொத்துமுடிதலின் நிலைமண்டிலவாசிரியப்பா.

(கு - பு.) இதனு - "வான்கண்" என்னும் இக்காதைச்செய்யுள். எல்லாவழியும் அளவொத்த நாற்சீரடியாக வருதல், நிலைமண்டிலவாசிரியப்பாவினிலக்கணம். இது, எகாரத்தாலாயினும், ஓகாரத்தாலாயினும், எனவென்பதனுலாயினும் முடியுமென அறிக.

நாடுகாண்காதை முற்றிற்று.

---

* ஊர்கான்காதை, க.